ஸ்ரீ

ஸ்ரீ குலசேகர ஆழ்வார் அருளிய

# ஸ்ரீ முகுந்த மாலை

ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் அனுவாதமும்





ப்ருஹி முகுந்தேதி—ரஸனே, ப்ருஹி முகுந்தேதி
கேசவ மாதவ கோவிந்தேதி க்ருஷ்ணனந்த ஸதானந்தேதி (ப்ருஹி)
ராதாரமண ஹரே ராமேதி ராஜீவாக்ஷ கனஶ்யாமேதி (ப்ருஹி)
—ஸ்ரீ சதாசிவ பிரும்மம்.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம், கும்பகோணம்.

श्रीः

श्रीचन्द्रमौलीश्वराय नमः

श्रीमन् महाराज कुलशेखरदिव्यसूरि कृता

# ॥ श्रीमुकुन्दमाला ॥

साहितीवल्लभ श्रीसुन्दराचार्यकृत द्रविडभाषानुवादटीकासहिता

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्य श्रीकामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादानां श्रीमुखेन समुद्भासिता



श्रीकामकोटिर्विजयते

श्रीकामकोटिकोशस्थानेन प्रकाशिता
श्रीशङ्करमठालयः, कुम्भघोणम्

मूल्यम् आणकपञ्चकम्] 1943 [स्वाम्यं कोशस्थानस्यैव

ஸ்ரீ குலசேகரப் பெருமாள்
இயற்றிய


# ஸ்ரீ முகுந்த மாலை

ஸாஹித்ய வல்லப, சீர்காழி **T. சுந்தராசாரி ஸ்வாமிகள்** பி.ஏ., பி.எல்.
செய்த தமிழ் மொழிபெயர்ப்புடனும்
குறிப்புரையுடனும்

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய
ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான
**ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்**
அருளிய திவ்ய ஸ்ரீமுகத்துடனும்
வெளியிடப்பட்டது.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
ஸ்ரீ சங்கர மடம், கும்பகோணம்

பதிப்புரிமை] 1943 [விலை ரூ. 0—5—0



ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

91/1

॥ श्रीः ॥

मुद्रा

श्रीमत्परमहंसपरिव्राजकाचार्यवर्य श्रीमच्छङ्करभगवत्पादप्रतिष्ठित-
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप श्रीजगद्गुरु श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः
क्रियते नारायणस्मृतिः ।

श्रीकामकोटिकोशस्थानान्मुद्राप्य प्रकाशयिष्यमाणः श्रीभगवद्गुण-वर्णनपटीयान् भक्तिरससर्वस्वः ऐहिकामुष्मिकश्रेयोनिदानं सरळमधुरपदवाक्य-रमणीयश्च मुकुन्दमालाख्यः स्तुतिरूपो ग्रन्थः पठितॄणां श्रोतॄणां च अभीप्सित-सर्वार्थसिद्धिप्रदो भूयादित्याशास्महे ॥

मकाम् श्रीगजारण्यक्षेत्रम्
(तिरुवानैक्कावल्)
श्रीशा०शके १८६५
सुभानु सं० भाद्रपदशु० ९ ॥

नारायणस्मृतिः ।

ஸ்ரீ:

முத்ரை

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக ஆசார்யர்களான ஸ்ரீமத் சங்கரபகவத் பாதர்களால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபர்களான ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்ரீபாதர்களால் நாராயணஸ்மரணம் செய்யப்படுகின்றது.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்திலிருந்து அச்சிட்டு வெளியிடப்படுகின்றதாய் ஸ்ரீ பகவானுடைய குணங்களை வர்ணிப்பதிலே திறமை வாய்ந்ததும் பக்தி ரஸமெல்லாம் நிறைந்த நிதியானதும் இகபர நன்மைகளை யளிப்பதும் ஸரளமாயும் மதுரமாயுமுள்ள பதங்களாலும் வாக்கியங்களாலும் ரமணீயமானதுமான முகுந்தமாலா என்னும் ஸ்துதி ரூபமான நூலானது படிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் அவரவர்கள் விரும்பிய எல்லாப் புருஷார்த்தங்களையும் பெறும்படி அளிப்பதாகுக என்று ஆசீர்வதிக்கின்றோம்.

முகாம்: ஸ்ரீ கஜாரண்ய க்ஷேத்ரம்
(திருவானைக்காவல்)
ஸ்ரீ சாலிவாஹனசகம் 1865
ஸ்வபானு ஸம்॰ பாத்ரபத
ஶுத்த நவமி. [8—9—1943]

நாராயண ஸ்ம்ருதி:

# முகவுரை

தென் மொழியில் பெருமாள் திருமொழியையும், வட மொழியில் முகுந்தமாலையையும் திருவாய் மலர்ந்தருளியவர் ஸ்ரீ குலசேகரப் பெருமாள். இவர் சுமார் 14 நூற்றாண்டு களுக்கு முன் கோழிக்கோடு என்னுமிடத்தில் அரசாண்டு வந்த ஒரு விஷ்ணு பக்த சிரோமணியென்று இவர் ஆக்கிய பிரபந்தங்களிலிருந்து ஒருவாறு அறியப்படுகிறது.

கி. பி. 11-வது நூற்றாண்டில் இருந்தவரென்று நிச்சயிக்கப்படுகிற போஜ மகாராஜன் காலத்திற்கு வெகு முந்தி முதலே பக்தி யென்பது ச்ருங்காரம் முதலியதைப் போல் தனித்ததோர் ரஸமென்று பிரசித்தி பெற்றுள்ளது. இந்த ரஸத்தை முக்கியமாகக் கொண்டு பாடப்பெற்ற பிரபந்தங்களில் முகுந்த மாலை மிகச் சிறப்புடையதாகும். 17-வது நூற்றாண்டில் இருந்தவரென்று தெரியவருகிற ராகவானந்தர் என்பவர் விஸ்தாரமான உரை யொன்றை வடமொழியில் இதற்குப் பணித்துள்ளார். அவ்வுரையையே முக்ய ஆதாரமாகக் கொண்டு இதற்கு என்னால் தமிழில் ஒரு மொழி பெயர்ப்பும், அதன் கீழே சில விசேஷக் குறிப்புகளும் எழுதப் பட்டுள்ளன. ஸ்ரீ உ. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய ஸ்வாமியால் அருளப்பட்டுள்ள தமிழ் உரை ஒன்றையும் சிற்சில இடங்களில் நான் உதவியாகக் கொண்டதுண்டு.

மொழி பெயர்ப்பு சிறிது இடங்களில் சற்று விளக்க மாகவே செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பில் காணப்பட்ட ச்லோகங்களுக்குத் தமிழில் விரித்து மொழி பெயர்க்காமல் பல இடங்களில் விட்டுவிட நேர்ந்தது, புத்தகம் விரிந்து விடும் என்கிற பயத்தால் ; அக்குறையைப் பொறுக்குமாறு இதைப் படிப்போர்கள் வேண்டப் படுகிறார்கள்.

இப் புத்தகத்தை எழுதும்படி என்னைத் தூண்டித் தக்க உதவி புரிந்தவர் என் நண்பர் ஸ்ரீ Dr. V. ராகவன், எம். ஏ. பி. எச். டி.. எழுதும் யோக்யதையை எனக்கு உண் டாகும்படி அனுக்ரஹித்து அருளியவர்கள் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபர்களாக எழுந்தருளியிருக்கும் ஸாக்ஷாத் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள். இம்மொழி பெயர்ப்பிலுள்ள தோஷங்களுக்கெல்லாம் என் அறியாமையும், ஏதாவது குணங்களிருந்தால் அவற்றிற்கு அந்த ஸ்வாமிகளின் அனு க்ரஹமுமே காரணங்கள்.

**தி. சுந்தராசாரி**

ஸ்ரீ

# முகுந்தமாலைத் தோத்திரம்

वन्दे मुकुन्दमरविन्ददलायताक्षं कुन्देन्दुशङ्खदशनं शिशुगोपवेषम् ।
इन्द्रादिदेवगणवन्दितपादपीठं बृन्दावनालयमहं वसुदेवसूनुम् ॥ १ ॥

1. வந்தே முகுந்த மரவிந்த தலாயதாக்ஷம்
குந்தேந்து சங்க தசனம் சிசு கோபவேஷம் |
இந்த்ராதி தேவ கண வந்தித பாதபீடம்
ப்ருந்தாவனாலயமஹம் வஸுதேவஸூனும் ||

தாமரை மலர்போல் நீண்ட கண்களையுடையவரும், குந்த புஷ்பம், சந்திரன், சங்கு இவற்றையொத்த பற்களையுடையவரும் இந்திரன் முதலான தேவர் கூட்டங்களால் வணங்கப்பெற்ற பாத பீடத்தையுடையவரும், பிருந்தாவனத்தை வாஸஸ்தானமாகவுடையவரும் இடையக் குழந்தை வேஷம் தரித்தவரும் வஸுதேவருக்குப் புத்திரருமான ஸ்ரீ முகுந்தரை நான் நமஸ்கரிக்கின்றேன்.

श्रीवल्लभेति वरदेति दयापरेति भक्तप्रियेति भवलुण्ठनकोविदेति ।
नाथेति नागशयनेति जगन्निवासेत्यालपनं प्रतिपदं कुरु मे मुकुन्द ॥ २

2. ஸ்ரீ வல்லபேதி வரதேதி தயாபரேதி
பக்தப்ரியேதி பவலுண்டன கோவிதேதி |
நாதேதி நாக சயநேதி ஜகந்நிவாஸே-
த்யாலாபநம் ப்ரதிபதம் குரு மே முகுந்த ||

ஸ்ரீ தேவியின் காதலனே என்றும், வேண்டுவதைத் தருபவனே யென்றும், (தீனர்களிடத்தில்) இரங்கும் தன்மை

வாய்ந்தவனே யென்றும், பக்தர்களிடத்தில் அன்புபாராட்டு கிறவனே யென்றும்,(அவர்களுடைய) ஸம்ஸார துக்கத்தைப் போக்கவல்லவனே என்றும், எல்லாவிதமான ஆபத்துக் களிலிருந்தும் ரக்ஷிக்கின்றவனே யென்றும், 'உரகமெல் லணையானே' என்றும், எல்லா உலகங்களும் தன் உதரத் திலே தங்கப்பெற்றும் தான் எல்லா உலகங்களின் உள்ளும் புறமும் வஸிக்கப்பெற்றவனே யென்றும், அடிக்கடி (அல் லது சொற்கள்தோறும்) நான் சொல்லும்படி, ஹே முகுந் தனே, நீ என்னைச் செய்தல் வேண்டும்.

'பகவான்' என்கிற சொல்லுக்கு முதற் பொருளாய் விளங்கும் எம்பெருமானை, 'எண் குணத்தான்' என்று சிறப்பித்துக் கூறுகிறார் ஸர்வக்ஞரான திருவள்ளுவரும். ஆனால் இந்த எட்டு குணங்களும் ஸந்தர்ப்பாநுஸாரமாகப் பேசப்படுகின்றன. ஸ்ரீ ராமாயணத்தில் வாலியை வதஞ் செய்து நின்ற ஸ்ரீராமனை நோக்கிய தாரை, 'த்வமப்ரமே யஶ்ச ஃராஸதஶ்ச ஜிதேந்த்ரியஶ்சோத்தமயார்மிகஶ்ச | அக்ஷய்யகீர்(த்)திஶ்ச விசக்ஷணஶ்ச க்ஷிதிக்ஷமாவாந் க்ஷத ஜோபமாக்ஷ:||' என்று எட்டு குணங்களைக் கூறினாள். ஸம் ஸாரி ஜீவனுக்குப், ஸர்வேஶ்வரனுக்குமுள்ள வைலக்ஷண் யத்தை எண்ணி இக்குணங்கள் 'ஏஷ ஆத்மா அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யு: விஶோகோ விஜிவித்ஸோ' (அ)பிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:' என்று எட்டாக உபநிஷத் தில் உபதேசிக்கப்படுகின்றன. இங்கு ஸ்ரீ குலசேகர கவியோ அந்தக் குணஷ்டகத்தைப் பகவானுக்கும் பக்த ருக்குமுள்ள ஸம்பந்தாதிக்யத்தை முன்னிட்டு 'ஸ்ரீ வல்ல ஹேதி' என்றவாறு பாடினார்.

குரு—எவனை முன்னேறச்செய்ய விரும்புகிறாரோ அவனை நல்ல காரியங்களையும், எவனைக் கீழ்ப்படுத்த ஸங் கல்பிக்கிறாரோ அவனைக் கெட்ட காரியங்களையும் செய் யும்படி செய்பவர் ஸர்வேச்வரனே என்று வேதம் சொல்

வதற்கிணங்க, இங்கே அவர் குரு (செய்) என்று வேண்டப் படுகிறார்.

ஸ்ரீவல்லபேதி என்று இங்கே தொடங்கி யிருப்பது, பெருமாளும் பிராட்டியும் சேர்ந்திருக்கையில், தாயான பிராட்டியை முன்னிட்டுச் செய்யப்படும் பிரார்த்தனையே தான் நிச்சயம் பலிதமாவது என்பதை அறிவிக்கின்றது.

தயாபரேதி என்பது 'வயார்ஹமபி காகுத்ஸ்த்ஃ க்ருபயா பர்யபாலயத்' என்றபடி, சீதையிடத்தில் அபசா ரப்பட்ட காக்கை உயிர் தப்பியதையும், நாதேதி என்றி ருப்பது 'ஹா நாத ஹா ரமாநாத வ்ரஜநாதார்த்திநாஶந' என்று திரௌபதி கதறியழுத பொழுது அவளுக்குப் புடவை சுரந்த அதிசயத்தையும் நினைவூட்டுகின்றன.

நாகஶயநேதி—அனந்த நாகத்தில் பகவான் சயனம் செய்வது அடியார்கள் மனதைக் கவரத் தக்கதோர் காட்சி என்று பெரியாழ்வார் திருவாய்மலர்ந்தருளுவர்:

வெள்ளை வெள்ளத்தின்மேல் ஒரு பாம்பை
மெத்தையாக விரித்து அதன் மேலே (என்று.)

ஸ்ரீ காளிதாஸருங் கூட 'போகிபோகாஸனுவீநம்' என்று இதையே கொண்டாடுவர்.

ஆலாபநம் மே குரு என்றிருப்பது பகவானே என் நாவாகிற ஸிம்ஹாஸனத்தில் வீற்றிருந்து என் பொருட்டு இவ்வாறு சொல்லிக்கொண்டிருக்க வேணுமென்கிற பொருளைத் தருகிறது. ஸ்ரீ வேதாந்த தேசிகன் பிரபந்தங்களில் இவ்விதப் பொருள் பரவிக் கிடக்கும்; 'நாவிஷ்ணுঃ கீர்த்தயேத் விஷ்ணும்' என்றுள்ள சாஸ்திரத்தையும் இது பின் பற்றியதாகும்.

முகுந்த என்கிற ஸம்போதனம் உம் பெயரின் பொருளுக்கு இசைந்தவாறு நீர் எனக்கு முக்தியைத் தருவதைக் காட்டிலும், உம் நாமங்களை நான் சொல்லும் பாக்கியமே மேலானது என்பது த்வனிதம்.

அஸத் கீர்(த்)தன காந்தார பரிவர்(த்)தன பாம்ஸுலாம் |
வாசம் சௌரிகதாலாப கங்கயைவ புனீமஹி ||

'விஷய கீர்த்தனங்களைச் செய்து புழுதிக் காட்டில் புரண்டு கொண்டிருக்கும் என் சொற்களைக் கண்ணனுடைய பேச்சாகிற கங்கை நீரால் அலம்புகிறேன்' என்றுள்ள மூத்தோர் சொல் இங்கே அநுஸந்தேயம்.

வரதேதி 'ஸ்மரத: பாதகமலம் ஆத்மானமபி யச்சதி' அதாவது ஸ்ரீ பகவானுடைய வரந்தரும் இயல்பின் எல்லை நிலம் தன்னை நினைப்பவர்களுக்குத் தன்னையே தருவதாகும். இந்த ரஹஸ்யம் ஸுதாமருடைய பத்னியால் ஸ்ரீ பாகவதத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. வரதேதி என்றிருப்பதற்கு இதுவே தக்க வ்யாக்யானமாகிறது.

जयतु जयतु देवो देवकीनन्दनोऽयं
जयतु जयतु कृष्णो वृष्णिवंशप्रदीपः ।
जयतु जयतु मेघश्यामलः कोमलाङ्गो
जयतु जयतु पृथ्वीभारनाशो मुकुन्दः ॥ ३ ॥

3. ஜயது ஜயது தேவோ தேவகீநந்தநோ'யம்
ஜயது ஜயது க்ருஷ்ணோ வ்ருஷ்ணி வம்சப்ரதீப: |
ஜயது ஜயது மேகச்யாமள: கோமளாங்கோ
ஜயது ஜயது ப்ருத்வீ பாரநாசோ முகுந்த: ||

தேவனென்று புகழ் பெற்று என் எதிரே நிற்கும் இத் தேவகி மைந்தன் மேன்மேலும் ஜயிக்கக் கடவன்; வ்ருஷ்ணியின் குல விளக்காய் விளங்கும் இந்த ஸ்ரீ கிருஷ்ணன் மேன் மேலும் ஜயிக்கக் கடவன்; நீருண்ட மேகத்தைப்போல் கரிய நிறத்தையும் ம்ருதுவான அவயவங்களையுமுடைய இவ் வழகன் மேன்மேலும் ஜயிக்கக் கடவன்; பூமியின் பாரத்

தைப்போக்கி, முக்தியை அளிக்கும் தன்மை வாய்ந்த இந்த முகுந்தன் மேன்மேலும் ஜயிக்கக் கடவன்.

ஸ்ரீ குலசேகரகவி பகவன்னுமங்களைக் கீர்த்தனம் செய்ய ஆரம்பித்தபோதே, ஸ்ரீ முகுந்தன் இந்தப் பக்தருக்குத் தன்னை ஒருகால் காண்பித்து நிற்க வேண்டுமென்றெண்ணி, அவர் உள்ளத்தில் ஸாக்ஷாத்கார வடிவுகொண்டு நிற்க, அதைக் கண்டதும் ஸ்ரீ குலசேகரர், 'அயம் தேவகீ நந்தனஃ' 'இதோ இருக்கின்றாரே தேவகி மைந்தன்', என்று அளவிலா ஆனந்தமடைந்து, அவரை ஜயது ஜயது என்று இங்கே சொல்லிப் பிரதிநந்தனம் செய்கின்றார்.

பகவானைக் கண்காணவொட்டாமல் எப்போதும் தலைவிரித்தாடி ஆரவாரஞ் செய்துகொண்டிருக்கும் விஷயப் பிசாசுகளை ஓட்டுதற்குரிய உச்சாடன மந்திரம்போல் இச் சுலோகம் கேட்கப்படுகிறது.

'தன்னை எதிர்த்து நின்று இறந்தார்க்கும் முக்தி'— இது சுகருடைய ஸூக்திகளால் ஸ்ரீ பாகவதத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

விஜயரத குடும்ப ஆத்ததோத்ரே
ஹ்ருதஹயரஶ்மிநி தச்ஶ்ரியேக்ஷணீயே |
பகவதி ரதிரஸ்து மே முமூர்ஷோஃ
யமிஹ நிரீக்ஷ்ய ஹதா கதாஃ ஸ்வரூபம் ||

பூபாரத்தை ஒழிக்க வேண்டிய நிமித்தம் பகவான் ஸங்கல்பித்தபடி நிகழ்ந்த பாரத யுத்தத்தில் அர்ஜுனன் ரதத்தைத் தன் சொந்த குடும்பத்தைப்போல் வைத்து ரக்ஷித்துக்கொண்டு, அதிலே சாட்டையுங் கடிவாளமுங் கையுமாய் ஸாரத்யஞ்செய்த கண்ணனுடைய அழகைப் பார்த்துக்கொண்டே, அந்த ரதத்தை எதிர்த்து யுத்தஞ் செய்து உயிரிழந்த வீரர்கள் அனைவரும் பகவத்ஸாரூப்யத்தை அடைந்து முக்தி பெற்றார்கள் என்பது இதன் பொருள்.

தேவோ தேவகீநந்தனः தேவனென்றால் விளையாடுகிற வன் என்பது பொருள். ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் பகவானுடைய விளையாட்டுக்களாகையால் அவரே தேவः என்கிற சொல்லுக்கு உயர்ந்த அர்த்தமாய் விளங்குகிறார். ஸஹஸ்ர நாமத்தில் 'தேவகீநந்தனः ஸ்ரஷ்டா க்ஷிதீசः பாபநாசனः' என்று கூறப்படுகிறது. தேவகீநந்தனன் என்கிற பெயரை அடுத்து, ஸ்ரஷ்டா, ஈசः, பாபநாசனः என்கிற சொற்கள் இவ்வர்த்தத்தைப் போஷிக்கின்றன.

मुकुन्द मूर्ध्ना प्रणिपत्य याचे भवन्तमेकान्तमियन्तमर्थम् ।
अविस्मृतिस्त्वच्चरणारविन्दे भवे भवे मेऽस्तु भवत्प्रसादात् ॥ ४ ॥

4. முகுந்த₃ மூர்த்₄நா ப்ரணிபத்ய யாசே
ப₄வந்த மேகாந்த மியந்தமர்த₂ம் |
அவிஸ்ம்ருதிஸ் த்வச்சரணாரவிந்தே₃
ப₄வே ப₄வே மே'ஸ்து ப₄வத்ப்ரஸாதா₃த் ||

ஹே முகுந்தா, நான் உம்மைத் தலை வணங்கி நமஸ்கரித்து, இதற்கு இதுவே பயன் என்றிருக்கும் இவ்வளவான பிரயோஜனத்தையே பிரார்த்திக்கிறேன். உம்முடைய க்ருபையாலே ஜன்மங்கள் தோறும் உம் திருவடித் தாமரைகளை மறவாமை என்பது எனக்கு இருத்தல் வேண்டும்.

முன் ச்லோகத்தில் கூறியபடி பகவானுடைய ஸாக்ஷாத்காரத்தைப் பெற்ற கவி, அவரைப் பார்த்து, இங்கோர் வரம் கேட்கிறார். அதுவே தனக்குப் பரமோத்தேசம் அன்றி முக்தி என்பது வேண்டாம் என்று த்வனிப்பிப்பதற்காக முகுந்த என்கிற ஸம்போதனம் இங்கே செய்யப்படுகிறது.

இங்கே அவிஸ்மிருதி அல்லது மறவாமை என்றிருப்பது தேஹங்கள் வந்து வந்து போய்க்கொண்டிருந்தபோதிலும், அழியாமலிருக்கும் பக்தியைப் பெருக்குவதற்குரிய

ஞான விசேஷத்தைச்சொல்லுவதாகும். இதையே 'யத்வா ஸ்ம்ருதிः' என்று உபநிஷதங்கள் உபதேசிக்கின்றன.

ஸ்ரீ ராகவானந்தர் என்பவருடைய வ்யாக்கியானத்துடன் கூடிய முகுந்த மாலையில் இதுவே முதல் ச்லோகமாகக் காணப்படுகிறது. இதற்கு முன் உள்ள ச்லோகங்கள் அதில் இல்லை. அந்த வ்யாக்யானத்தில் முகுந்தாஷ்டாதசாக்ஷர மந்த்ரத்தை மூலமாகக்கொண்டு இத் தோத்திரம் ஆக்கப்பட்டிருக்கிறதென்று குறிக்கப்பட்டிருக்கிறது. அம் மந்த்ரம் ஸ்ரீமந் முகுந்தசரணௌ ஸதா ஶரணமஹம் ப்ரபத்யே என்பதாகும்.

இந்த ச்லோகமும், இதைப்போலுள்ள வேறு பல ச்லோகங்களும் சரணாகதியின் முதல் அங்கமான ஆநுகூல்யஸ்ய ஸங்கல்பः (அநுகூலத்தை விரும்புவது) என்பதைச் சொல்லுகின்றவை.

> நாத யோநிஸஹஸ்ரேஷு யேஷு யேஷு வ்ரஜாம்யஹம் |
> தேஷு தேஷ்வச்யுதா பக்திரச்யுதா'ஸ்து ஸதா த்வயி ||

'எப்பிறப்பை அடைந்தாலும், அதில் உன்னிடத்தில் பக்தி ஒன்றையே பிரார்த்திக்கிறேன்' என்று ப்ரஹ்லாதர் சொல்லியதுபோல் இவரும் சொல்லுகிறார்.

**श्रीमुकुन्दपदाम्भोजमधुनः परमाद्भुतम् ।**
**यत्पायिनो न मुह्यन्ति मुह्यन्ति यदपायिनः ॥ ५ ॥**

5. ஸ்ரீ முகுந்த பதாம்போஜமதுந: பரமாத்புதம் |
யத்பாயினோ ந முஹ்யந்தி முஹ்யந்தி யதபாயின: ||

ஸ்ரீ முகுந்தனுடைய திருவடித் தாமரைகளில் உள்ள மதுவைப் பானம் செய்கிறவர்கள் மயக்கமற்று இருக்க, அதைக் குடிக்காதவர்கள் மயக்கமுற்று இருக்கிறார்களே, இது என்ன அளவற்ற ஆச்சரியம்!

नाहं वन्दे तव चरणयोर्द्वन्द्वमद्वन्द्वहेतोः
कुम्भीपाकं गुरुमपि हरे नारकं नापनेतुम् ।
रम्या रामा मृदुतनुलता नन्दने नापि रन्तुम्
भावे भावे हृदयभवने भावयेयं भवन्तम् ॥ ६ ॥

6. நாஹம் வந்தே தவ சரணயோர் த்வந்த்வமத்வந்த்வஹேதோ:
கும்பீபாகம் குருமபி ஹரே நாரகம் நாபநேதும் |
ரம்யா ராமா ம்ருதுதநுலதா நந்தநே நாபி ரந்தும்
பாவே பாவே ஹ்ருதயபவநே பாவயேயம் பவந்தம் ||

ஹரி என்றிருப்பவனே, உன்னுடைய இரண்டு திருவடிகளையும் வணங்குவது, இரட்டைகளை ஒழிப்பதென்கிற மோக்ஷத்தின் பொருட்டன்று, நரகத்தில் உள்ள எல்லையற்ற துக்கத்தை யுண்டுபண்ணக்கூடிய கும்பீபாகம் என்பதைத் தவிர்ப்பதற்காகவும் அன்று, நந்தனம் என்கிற தோட்டத்தில் மனதிற்கினியவர்களும், ஸ்பர்ச ஸுகம் மிகுந்துள்ள கொடி போன்ற சரீரம் வாய்ந்தவர்களுமான அழகிய அப்ஸரஸுகளுடன் கூடிக் களிப்பதற்குமன்று. பின் எதற்கென்றால், ஜன்மங்கள் (அல்லது எண்ணங்கள்) தோறும் என் ஹ்ருதயம் என்கிற கோயிலில் உன்னை வைத்து நான் தியானிப்பதற்கே.

"நீர் கேட்கும் 'அவிஸ்மிருதி' எதற்கு உதவும்? மோக்ஷத்தைப் பெறுவதற்காவது, நரகானுபவத்தைத் தடுப்பதற்காவது, நேரே பயன்படாதாகையால், அவற்றைப் பெறுவதற்கல்லவோ முதலில் நீர் என்னை வழிபட வேண்டும்'' என்று பகவான் நினைக்கக் கூடுமென்று சந்தேகித்து, நாஹம் வந்தே என்றவாறு பதில் உரைக்கிறார் இக் கவி. "என் மனக்கோயிலில் ஸ்ரீ முகுந்தனை எழுந்தருளப்பண்ணி அவனை இடைவிடாது த்யானிப்பதற்கு இன்றியமையாததான இந்த அவிஸ்மிருதி ஒன்றை நான் பெற்றால், மோக்ஷானந்தத்தையோ, நரக துக்கத்தையோ, ஸ்வர்க்க ஸுகத்தையோ ஒன்றையும் நான் உணரவேமாட்டேன்.

ஆகையால் அவை இருந்தால் என்ன? சென்றால் என்ன? என்று கவி கொண்ட உறுதியான ஸங்கல்பம் ச்லோகத்தில் த்வனிக்கும்.

மின்னனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும்
அன்னவர்தம் பாடலுடன் ஆடலவை ஆதரியேன்

என்று பெருமாள் திருமொழியிலுள்ள பாசுரம் இங்கே நினைக்கத்தக்கது.

**नास्था धर्मे न वसुनिचये नैव कामोपभोगे**
**यद्यद्भव्यं भवतु भगवन् पूर्वकर्मानुरूपम् ।**
**एतत्प्रार्थ्यं मम बहुमतं जन्मजन्मान्तरेऽपि**
**त्वत्पादाम्भोरुहयुगगता निश्चला भक्तिरस्तु ॥ ७ ॥**

நாஸ்யா யர்மே ந வஸுநிசயே நைவ காமோபஹோகே
யத்யத் ஹவ்யம் ஹவது ஹகவந் பூர்வகர்மாநுரூபம் |
ஏதத் ப்ரார்த்யம் மம வஹுமதம் ஜந்மஜந்மாந்தரே'பி
த்வத் பாதாம்ஹோருஹ யுககதா நிச்சலா ஹக்திரஸ்து ||

ஷட்குண ஸம்பூர்ணரான பகவானே! எனக்குத் தர்மத்திலும் ஈடுபாடில்லை; அவ்விதமே பொருள் சேர்ப்பதிலும் இல்லை; காம ஸுகங்களைப் பெறுவதிலோ கட்டோடு கிடையாது, முன் செய்த வினைப்படி அவசியமாய் வரக்கடவதான எது வந்தாலும் வரட்டும். என்னுல் பிரார்த்திக்கத்தக்க பரிபூர்ண பிரயோஜனமாய் நிர்ணயிக்கப்பட்டது யாதெனில், இப்பிறப்பிலும் இனியுள்ள பிறப்புக்களிலும் உன்னுடைய இரண்டு திருவடித் தாமரைகளிலும் உறுதியான பக்தியொன்றே எனக்கு இருக்கவேண்டுமென்பதே.

பூர்ணமான ஆனந்தானுபவத்திற்கு பக்தி, முக்தி இவ்விரண்டும் துல்யமான கௌரவத்தை உடையவையாய் இருந்தாலும் லோகம் பின்ன ருசியாய் இருப்பதால், நான் வேண்டுவது பக்தி ஒன்றையேதான் என்பதில் என்ன

தோஷம்?'' என்பது இங்கே கவியின் கருத்து என்பர் ஸ்ரீராகவானந்தர்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற இந்நான்கே புருஷார்த்தங்கள் (அதாவது, விவேகியால் அடையப்பட வேண்டிய பிரயோஜனங்கள்) என்று ஏற்பட்டிருக்க, நீர் 'இற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்' பக்தியையே வேண்டு கிறீரே, அதெப்படி?' என்றால், பக்தி யென்பது ஒரு புருஷ னுடைய இயற்கையே ஆகும், கேவலம் புருஷார்த்த மட்டிலுமே யன்று; ஆகையால் அது ஒன்றையே பெறுவ தற்கு நான் இங்கு வேண்டுகின்றேன் என்பது இச்சுலோ கத்தின் தாத்பர்யம்.

**दिवि वा भुवि वा ममास्तु वासो नरके वा नरकान्तक प्रकामम् ।**
**अवधीरितशारदारविन्दौ चरणौ ते मरणेऽपि चिन्तयानि ॥ ८ ॥**

8. திவி வா ஹுவி வா மமாஸ்து வாஸோ
நரகே வா நரகாந்தக ப்ரகாமம் |
அவதீரித ஶாரதாரவிந்தௌ
சரணௌ தே மரணே'பி சிந்தயானி ||

நரர்களுடைய விஷயப் பற்றுகளைப் போக்கடித்து ரக்ஷிப்பவனே, நான் ஸ்வர்க்கத்தில் வஸித்தாலென்ன? பூமியில் வஸித்தாலென்ன? அல்லது, வேண்டுமளவு நரகத் திலேதான் கிடந்தாலென்ன? உயிர்போகும் வரையில், இள வேனிற் காலத்தில் மலரும் தாமரைப்பூவைத் தோற்கடிப் பவையான உன்னுடைய இரண்டு சரணங்களையே நினைக் கின்றவனுவேன்.

ஸ்ரீ பகவத் ஸாக்ஷாத்காரத்தை அடைந்த ஸ்ரீ குலசே கரகவி, முதலாக பக்திக்குரிய ஞான விசேஷத்தையும், பிறகு பக்தியையும், மூன்றுவதாக அந்தப் பக்திக்குப் பலனுக நிற்கும் அநுராகத்தையும் பிரார்த்தித்து, இங்கே

அவ்வநுராகம் ஆயுள்முழுவதும் தன் மனதை விட்டகலாமல் இருக்க வேண்டியதைப் பிரார்த்திக்கிறார்.

நரகாந்தக—'நராணும் கம், வைஷயிக ஸுகம், தஸ்ய அந்தம், அவஸானம் கரோதீதி நரகாந்தகஃ' என்றிருக்கும் வ்யாக்யான ஸரணியைக்கொண்டு அந்த சப்தம் இங்கே மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது. நரகமென்றால் ஸம்ஸாரம்; அதைப் போக்கடிப்பதால் 'நரகாந்தகஃ' என்று இதற்குப் பொருள் கூறி, 'தேஷா மஹம் ஸமுத்தர்(த்)தா ம்ருத்யு ஸம்ஸார ஸாமராத்' என்றுள்ள கீதா ச்லோகத்தையும் பிரமாணமாக ஸ்ரீராகவானந்தருடைய வ்யாக்யானத்தில் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

कृष्ण त्वदीयपदपङ्कजपञ्जरान्तः अद्यैव मे विशतु मानसराजहंसः।
प्राणप्रयाणसमये कफवातपित्तैः कण्ठावरोधनविधौ स्मरणं कुतस्ते ॥९

9, க்ருஷ்ண த்வதீய பதபங்கஜ பஞ்ஜராந்தஃ
அத்யைவ மே விஶது மாநஸ ராஜஹம்ஸஃ |
ப்ராணப்ரயாணஸமயே கஃபவாதபித்தைஃ
கண்டாவரோதநவிதௌ ஸ்மரணம் குதஸ் தே ||

ஸ்ரீ கிருஷ்ணனே, மானஸ ஸரஸில் வஸிக்கும் ராஜஹம்ஸம்போல் என் மனதிலே குடிகொண்டிருக்கும் பாவனா விசேஷமானது (அந்தரங்கப் ப்ரீதியானது) இன்றைக்கே தாமரைக் கூடென இருக்கும் உன் திருவடிகளை அடைந்துவிடட்டும். (ஏனெனில்,) வாத பித்த சிலேஷ்மங்கள் நெஞ்சடைக்கும் வகையுற்ற உயிர் போகும் அத்தருணத்தில் நான் உன்னை நினைப்பது எங்கே?

இறக்குங் காலத்தில் எந்த பாவனையை ஒருவன் ஸ்மரிக்கிறானோ, அதையே அவன் மறு பிறவியில் அடைகிறான் என்று சாஸ்திரம் இருந்தாலும், அந்த சாஸ்திரத்தை விளம்பியவர் ஸ்ரீ கிருஷ்ணனே யாதலால் இங்கு ஸ்ரீ

குலசேகரர் ஸ்ரீ கிருஷ்ணனே என்று ஸாபிப்பிராயமாக ஸம்போதனம் செய்து, அந்திம ஸ்மிருதி என்பது அதிதுர் லபமாகையாலே இன்றைக்கே அதன் பயன் எனக்குக் கிடைத்து விடும்படி அனுக்கிரஹிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறார்.

**चिन्तयामि हरिमेव सन्ततं मन्दमन्दहसिताननाम्बुजम् ।**
**नन्दगोपतनयं परात्परं नारदादिमुनिवृन्दवन्दितम् ॥ १० ॥**

10. சிந்தயாமி ஹரிமேவ ஸந்ததம்
மந்த மந்த ஹஸிதாநநாம்புஜம் |
நந்தகோப தநயம் பராத்பரம்
நாரதாதி முனிப்ருந்தவந்திதம் ||

சிறிது சிறிது புன்னகையுடன் கூடிய முகத்தாமரையையுடையவனாய், நாரதர் முதலிய முனிவர்க்கங்களால் ஸேவிக்கப் பெற்றவனாய், மேலோர்க்கும் மேலோனாய் விளங்கும் நந்தகோபாலர் மகனாகத் தன்னைக்காட்டி என் மனதை அபஹரிக்கும் இந்த ஹரியையே நான் இடைவிடாது நினைக்கின்றேன்.

இந்த ச்லோகம், 'தைலதாராவத் அவிச்சின்னஸ்ம்ருதி ஸந்தான ரூபா' என்று எண்ணெய்த் தாரையைப்போல் இடைவெளியற்ற ஞாபகரூபமான தியானத்தைக் குறிப்பிடுகிறது. அவ்விதத் தியானம் நிலைபெறுவதற்கு ஸ்ரீ கிருஷ்ணரூபியான பகவான் இன்றியமையாத அவலம்பனம் என்பதையும் த்வனிப்பிக்கின்றது. ஸ்ரீ கிருஷ்ணனுடைய திவ்யமங்கள விக்ரஹத்தின் ஸௌந்தர்யம் மனவிற்கு இயல்பாயுள்ள சாஞ்சல்யத்தை ஒழித்துத் தன்னிடம் அதை இழுக்கும் ஸ்வபாவமுள்ளதாகையால், இதை 'தாரணா த்யான மங்களம்' என்று விசேஷிப்பர் ஸ்ரீ சுகர்.

करचरणसरोजे कान्तिमन्नेत्रमीने
श्रममुषि भुजवीचिव्याकुलेऽगाधमार्गे ।
हरिसरसि विगाह्यापीय तेजोजलौघम्
भवमरुपरिखिन्नः खेदमद्य त्यजामि ॥ ११ ॥

11. கரசரணஸரோஜே காந்திமந் நேத்ரமீநே
ஶ்ரமமுஷி ஹுஜவீசிவ்யாகுலே' காயமார்கே |
ஹரிஸரஸி விகாஹ்யாபீய தேஜோஜலௌவம்
ஹவமருபரிவிந்ந: வேடிமஜு த்யஜாமி ||

திருக்கைகள், திருவடிகள் என்ற தாமரைப் புஷ்பங்களையுடையதும், பிரகாசிக்கும் விழிகளான மீன்கள் சஞ்சரிக்கப்பெற்றதும், அடியார்கள் அறியாமலே அவர்களது ஸம்ஸார தாபத்தைத் தணிப்பதும், தோள்களாகிற அலைகளால் வியாபிக்கப்பட்டதும், நிலையிலாத ஆழமுள்ளதுமான ஹரியாகிய ஏரியில் நீராடி, அதிலுள்ள அவனுடைய காந்திமயமான ஜலப்பிரவாகத்தை அள்ளிக் குடித்து, பிறப்பென்ற பாலைவன நடமாட்டத்தால் சோர்வுற்ற நான் இன்று என் களைப்பைப் போக்கிக்கொள்ளுகிறேன்.

ஸமுத்திரம்போல் எல்லையற்று அகண்டமாய்ப் பிரகாசிக்கும் பிரும்ம ஸ்வரூபத்தைத் தன்னுடைய பக்திமிகுதியால் கரசரணவிசிஷ்டரான ஹரி என்னும் ஓர் மடுவாகத் தேக்கி, அதில் ஸ்நானபானங்களைச் செய்வதாலே ஸம்ஸார தாபங்கள் அனைத்தையும் போக்கடித்துக் கொள்ளுகிறார். இவர் பக்தி யதிசயத்தால் பெற்ற நிலையை,

நாஹம் வேதைஃ ந தபஸா ந தானேன ந சேஜ்யயா |
ஶக்ய ஏவம்விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவானஸி மாம் யதா ||
ஹக்த்யாத்வநந்யயா ஶக்யஃ அஹமேவம்விதோர்'ஜுந |
ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ||

என்றிருக்கும் கீதா ச்லோகங்கள் வர்ணிக்கின்றன.

सरसिजनयने सशङ्खचक्रे मुरभिदि मा विरमस्व चित्त रन्तुम् ।
सुखतरमपरं न जातु जाने हरिचरणस्मरणामृतेन तुल्यम् ॥ १२

12. ஸரஸிஜ நயநே ஸஶங்வசக்ரே
முரஹிதி மா விரமஸ்வ சித்த ரந்தும் |
ஸுவதரமபரம் ந ஜாது ஜாநே
ஹரிசரண ஸ்மரணாம்ருதேந துல்யம் ||

தாமரை மலர்போல் (நித்ய ஸுஹமமாய்) இருக்கும் கண்களையுடையவனும், சங்குசக்கரங்களைத் தரித்தவனுமான இந்த முராஸுரமர்த்தனனிடத்தில், என் நெஞ்சமே! நீ கூடியிருந்து ஆனந்திப்பதை விட்டொழியாதே. ஹரியின் பாதங்களைத் தியானிப்பது என்கிற அமிருதத்திற்கு ஒப்புயர்வுள்ளதாக வேறெந்த சுகத்தையும் நான் ஒருபோதும் அறியேன்.

'ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்து: ஆத்மைவ ரிபுராத்மந:' என்றபடி ஒருவனுக்கு மனதே பந்துவைப்போல் நன்மை பயக்கத்தக்கதாயும், சத்துருவைப்போல் தீமை விளைப்பதாகவும் இருப்பதால், அதைக்குறித்து நல்ல உபதேசம் இங்கே செய்யப்படுகிறது. 'மநோஜாதி ரநுஸ்நு ஸுவேஷ்வேவ ப்ரவர்(த்)ததே' என்றபடி இன்பத்தை நாடுவதே மனதிற்கு இயல்பாதலால், ஹரிஸ்மரணத்தை விட மேலான இன்டம் ஒன்றுங் கிடையாது என்று இங்கே கூறப்பட்டிருககிறது.

ஸரஸிஜநயநே எனபதால் ஸௌந்தர்யாதிசயம், அருள் இவைகளும், ஸஶங்வசக்ரே என்பதால் ஆபன்னர்களைக் காப்பதிலுள்ள அக்கரையும், முரஹிதி என்பதால் ரக்ஷிப்பதற்கு இசைந்த ஸாமர்த்தியமும் உணர்த்தப்படுகின்றன.

'ஶ்ரவணம் கீர்(த்)தனம் விஷ்ணோ: ஸ்மரணம்' என்றபடிக்குள்ள ஒன்பது விதமான பக்தியையும் இந்த ஸ்தோத்திரம் அங்கங்கே விஷயீகரித்தாலும் கூட, விசேஷித்து

ஸ்மரண பக்தியையும் நாம ஸங்கீர்த்தனத்தையுமே கூறு கின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

माभीर्मन्दमनो विचिन्त्य बहुधा यामीश्चिरं यातनाः
नामी नः प्रभवन्ति पापरिपवस्स्वामी ननु श्रीधरः ।
आलस्यं व्यपनीय भक्तिसुलभं ध्यायस्व नारायणं
लोकस्य व्यसनापनोदनकरो दासस्य किं न क्षमः ॥ १३ ॥

13. மாஹீர் மந்தமனோ விசிந்த்ய வஹுதா யாமீஶ்சிரம் யாதநா:
நாமீ ந: ப்ரபவந்தி பாபரிபவஸ் ஸ்வாமீ நநு ஸ்ரீதர: |
ஆலஸ்யம் வ்யபநீய பக்திஸுலபம் த்யாயஸ்வ நாராயணம்
லோகஸ்ய வ்யஸநாபநோதநகரோ தாஸஸ்ய கிம் ந க்ஷம: ||

இயமனால் ஏற்படக்கூடும் வேதனைகளையே பலவாறாய் எப்பொழுது பார்த்தாலும் எண்ணமிட்டுக்கொண்டிருக்கும் என் மட மனமே! நீ பயப்படாதே. பாபிகள் விஷயத்தில் சத்துருக்களைப் போல் நடக்கும் அந்த இயமகிங்கரர்கள் நம்மிடத்தில் செல்வாக்கற்றவர்களே. ஏனெனில் லக்ஷ்மீ தேவியை மார்பில் தரித்துக் கொண்டிருக்கும் இவனல்லவா நமக்கு இறைவன்? (ஆகையால்) அசட்டையை அடியோடு ஒழித்து, பக்தியினால் மிக எளிதில் அடையக் கூடியவனாய் நர ஸமூகங்களுக்கு ஆச்ரயமாய் விளங்குவதால் நாரா யணன் என்றிருக்கும் இவனைத் தியானம் செய். உலகத்தி னுடைய தீமைகளையே போக்கடிக்கும் இவன் தன்னுடைய அடியார்களின் துயரங்களையா தீர்க்க வல்லமையற்று இருப் பான்?

ஸ்வாமீ நநு ஸ்ரீதர: என்பதிலுள்ள விசேஷம் 'பகவான் நம் பாபங்களை எண்ணி ரக்ஷிப்பதற்கு இஷ்டப்படா விட்டாலும், அவர் தம் மார்பிலே தரித்துக் கொண்டிருக்கும் லோகமாதாவான லக்ஷ்மீ தேவி தக்க நியாயங்களைக் கூறி, அவரைக் கட்டாயம் ரக்ஷிக்கும்படி செய்வாள்' என்பதே.

भवजलधिगतानां द्वन्द्ववाताहतानां
सुतदुहितृकलत्रत्राणभारार्दितानाम् ।
विषमविषयतोये मज्जतामप्लवानां
भवतु शरणमेको विष्णुपोतो नराणाम् ॥ १४ ॥

14. ஹவஜலயிமதாநாம் த்வந்த்வவாதாஹதாநாம்
ஸுததுஹித்ருகளத்ரத்ராண ஹாரார்திதாநாம் |
விஷம விஷய தோயே மஜ்ஜதாமப்லவாநாம்
ஹவது ஶரணமேகோ விஷ்ணுபோதோ நராணும் ॥

காமக் குரோதங்களாகிற காற்றுகளால் அலைக்கப் பட்டு, மகன், மகள், மனைவி யென்ற இவர்களை ரக்ஷிக்கும் சுமையுடன் துக்கம் நிரம்பியுள்ள விஷயங்களாகிற ஜலத்தை யுடைய ஸம்ஸார ஸாகரத்தை யடைந்து, புணையொன்றும் பெறுது அதில் மூழ்கிக் கொண்டிருக்கும் இந்த மனிதர் களுக்கு விஷ்ணு என்ற மரக்கலமொன்றே அடைக்கலமாய் ஆகட்டும்.

ஸமுத்திரத்தில் கப்பலில்லாமல் தத்தளித்துக்கொண் டிருக்கும் ஒருவன் த்ருடமான கப்பல் ஒன்றை அடைந்து, அதில் ஏறினபிறகு புயல் முதலியவற்றிற்கு அஞ்சாமல்,அதே ஸமுத்திரத்தில் எப்படி வெகு ஸந்தோஷமாய் ஸஞ்சரிப் பானே, அதே விதமாக பகவானை அடைந்தபிறகு எத்துணை ஸம்ஸாரம் இருந்தாலும் அதில் இருப்பதால் தீங்கொன்றும் வாராதென்பது இங்கே கருத்து. 'த்வயா ஹி குப்தா விசரந்தி நிர்ஹயாঃ விநாயகாநீகப மூர்த்ஸு ப்ரஹோ.' அதாவது, 'பகவானை அடைந்தவர்கள் அவனுல் நாற்புறமும் ரக்ஷிக் கப்பட்டவர்களாய் இடையூறுகளின் தலைகளை மிதித்துக் கொண்டு நிர்ப்பயமாய் எங்கும் ஸஞ்சரிப்பார்கள் என் றுள்ள ஸ்ரீ சுகருடைய ஸூக்தி இதற்குப் பிரமாணம்.

விஷ்ணுபோதः என்பதிலுள்ள ஸ்வாரஸ்யம்—விஷ்ணு வென்ற சொல் வ்யாப்தியைக் குறிக்குமாகையால் அவ

ராகிய கப்பல் மிகப் பெருமை பெற்றதாய் எத்தகைய காற்றுகள் அடித்தாலும் அசையாமல், எவ்வளவு பாரங் கள் வைத்தாலும் அவற்றைத் தாங்கி, எவ்வளவு கொந் ளிப்புள்ள கடலானாலும் அதைப் பொருட் படுத்தாமல், எத்தனை பேர் ஏறினாலும் இடங்கொடுப்பதாய் இருக்கும்.

भवजलधिमगाधं दुस्तरं निस्तरेयं
कथमहमिति चेतो मा स्म गाः कातरत्वम् ।
सरसिजदृशि देवे तावकी भक्तिरेका
नरकभिदि निषण्णा तारयिष्यत्यवश्यम् ॥ १५ ॥

15. ஹவஜலயிமஹாயம் துஸ்தரம் நிஸ்தரேயம்
கயமஹமிதி சேதோ மா ஸ்ம ஹாः காதரத்வம் |
ஸரஸிஜஜ்ருஶி தேவே தாவகீ ஹக்திரேகா
நரகஹிதி நிஷண்ணா தாரயிஷ்யத்யவஶ்யம் ||

ஓ மனமே! அளவற்ற ஆழமுள்ளதாய்த் தாண்டுதற் கரிய இப் பிறவிக்கடலை எவ்வாறு தாண்டுவது என்று நீ அச்சமுறல் வேண்டாம். நரகனை வதைத்த அந்த தாமரைக் கண்ணனான தேவனிடத்தில் வைக்கப்பட்ட உன்னுடைய பக்தியே உன்னை நிச்சயமாய்த் தாண்டி வைக்கும்.

ஸரஸிஜத்ருஶி தேவே ஸர்வேஶ்வரன் தன் பார்வையா லேயே இவ்வுலகத்தை யுண்டாக்கி, அதை அநுக்ரகிக்கும் வல்லமை பெற்றவர் ஆகையால் பிறவிக் கடலைத் தாண்டி வைப்பது அவருக்கோர் பெரிதன்று. அவருடைய கடாக்ஷ லேசாநுலேசமே போதுமானது.

நரகஹிதி ஸம்ஸார ஸாகரத்தைத் தாண்டும் போது ஒரு சேதனனுக்கு வரக்கூடிய இடையூறுகளை நீக்குவது, நரகா சுரனையே வென்ற இவருக்கு மிக எளியதேயாகும் என்பதை இவ் விசேஷணம் குறிக்கும்.

ஏகா தாரயிஷ்யதி என்பதால் 'நான்ய: பந்தா அயனாய வித்யதே' என்றபடி பகவத் பக்தி ஒன்று தவிர, மற்றெதுவும் இவ்விதம் செய்விக்கச் சக்தியற்றது என்பது த்வனிதமாகும். 'தாரயிஷ்யத்யவஶ்யம்' சரணாகதியின் ஒரு அங்கமான 'ரக்ஷிஷ்யதீதி விஶ்வாஸ:' என்பது இதனால் உணர்த்தப் பெற்றது.

तृष्णातोये मदनपवनोद्धूतमोहोर्मिमाले
दारावर्ते तनयसहजग्राहसङ्घाकुले च ।
संसाराख्ये महति जलधौ मज्जतां नस्त्रिधामन्
पादाम्भोजे वरद भवतो भक्तिनावं प्रयच्छ ॥ १६ ॥

16. த்ருஷ்ணாதோயே மதநபவநோத்தூதமோஹோர்மிமாலே
தாராவர்(த்)தே தநயஸஹஜக்ராஹ ஸங்காகுலே ச |
ஸம்ஸாராக்யே மஹதி ஜலதௌ மஜ்ஜதாம் நஸ் த்ரிதாமந்
பாதாம்போஜே வரத பவதோ பக்திநாவம் ப்ரயச்ச ||

'விஷயாநுபவத்தில் இச்சை' என்ற நீருடையதும் காமன் என்ற காற்றினாலே கிளப்பப்பட்ட மோக அலைகள் வீசப்பெற்றதும், மனைவி என்ற சுழலுடன் கூடி, மக்கள், உடன்பிறந்தார் என்ற முதலைக் கூட்டங்கள் நிரம்பப் பெற்றதுமான ஸம்ஸாரம் என்ற பெயருள்ளதோர் பெருங் கடலில் மூழ்கிக் கொண்டிருக்கும் என்போன்றவர்களுக்கு, ஏ மூன்று ஸ்தானங்களிலுமிருப்பவனே! வரங்களெல்லாம் தருபவனே! 'உன்னுடைய இரண்டு சரணாரவிந்தங்களிலும் பக்தி' என்கிறதோர் ஓடத்தை உதவியருளவேணும்.

ஸ்ரீ ராகவாநந்தருடைய வியாக்யானத்தில், இங்கே முகுந்தாஷ்டாதசாக்ஷர மந்திரத்திலுள்ள அர்த்தங்கள் குறிப்பிடப்படுகின்றன என்று விவரிக்கப்பட்டிருக்கிறது.

த்ரியாமந் அகார, உகார, மகாரங்களென்று சொல்லப் படுகின்றவையும், விழிப்பு, தூக்கம், காடநித்திரை என்று

குறிப்பிடப்பட்டவையுமான மூன்று ஸ்தானங்களை உடையவர் என்பது ஒரு பொருள். 'ஹூ: ஹுவ: ஸுவ:' என்றுணர்த்தப்படும் மூவுலகங்களையும், மூன்று வ்யாஹ்ருதிகளையும் இருப்பிடமாய்க் கொண்டவர் என்பது மற்றொரு பொருள்.

ஹக்திநாவம் ப்ரயச்ஊ பகவானிடம் நமக்கு ஏற்படும் ப்ரீதிக்குப் பகவானே காரணமாக நிற்கின்றுரென்பது இங்கே கருத்து. 'யமேவைஷ வ்ருணுதே' இத்யர்தி ச்ருதியும் இங்கே நினைக்கத் தக்கது.

मा द्राक्षं क्षीणपुण्यान् क्षणमपि भवतो भक्तिहीनान् पदाब्जे
मा श्रौषं श्राव्यबन्धं तव चरितमपास्यान्यदाख्यानजातम् ।
मा स्मार्षं माधव त्वामपि भुवनपते चेतसापह्नुवाना-
न्मा भूवं त्वत्सपर्याव्यतिकररहितो जन्मजन्मान्तरेऽपि ॥ १७॥

17. மாத்ராக்ஷம் க்ஷீணபுண்யாந் க்ஷணமபி ஹவதோ ஹக்தி ஹீநாந் பதாப்ஜே
மாஶ்ரௌஷம் ஶ்ராவ்யபந்யம் தவ சரிதமபாஸ்யாந்யதா
க்யாநஜாதம் |
மாஸ்மார்ஷம்மாதவ த்வாமபி ஹுவநபதே சேதஸாபஹ்நுவாநாந்
மாஹூவம்த்வத்ஸபர்யாவ்யதிகரரஹிதோஜந்மஜந்மாந்தரே'பி ||

உம்முடைய பாதாரவிந்தத்தில் ஒரு நொடியேனும் பக்தி செய்யாத அப் பாவிகளை நான் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேன். உம் சரிதைகளைச் சொல்லாமல் வேறெந்தக் கதைகளையோ பேசும் பிரபந்தம் கேட்பதற்கு இனியதாயிருந்தாலும், நான் அதைக் கேட்கமாட்டேன். ஓ மாதவனே! லோகநாதா! உம்மை உள்ளத்தில் வைத்திருக்காதவர்களை நான் நெஞ்சாலும் நினைக்க மாட்டேன். எப்பிறப்பிலும் உம் பூஜைகளின் கூட்டுறவு இல்லாமல் இருக்கவும் மாட்டேன்.

இக்கவி தானோ அல்லது இவர் பெயரை அலங்கரிக்கும் வேறொரு பக்தரோ அருளிய பெருமாள் திருமொழியில்

மூன்றும் திருமொழியில் உள்ள பாசுரங்களை மிகவும் அநுஸரிப்பதாய் இருக்கிறது இச் சுலோகத்தின் கருத்து. அத்திருமொழியிலுள்ள முதல் பாசுரம்,

மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும்
இவ்வையந் தன்னொடும் கூடுவதில்லை யான்

என்று ஆரம்பிக்கிறது.

இக் கவியின் தாத்பர்யம், 'நான் எப்பொழுதும் உம் அடியார்களுடனே கூடி, உம் சரிதங்களைச் ச்ரவணம் செய்து கொண்டு, உம்மைத் தியானிப்பவரையே என் மனதில் இருத்தி, என் வாழ்நாளைக் கழிப்பேன்' என்பது; இங்கே நிஷேதத்தால் விதியின் த்வனி ஏற்படுகிறது கருதத் தக்கது.

'ப்ராதிகூல்யஸ்ய வர்ஜனம்' என்ற சரணாகதியின் இரண்டாவது அங்கம் இங்கே குறிப்பு.

वात्सल्यादभयप्रदानसमयादार्तार्तिनिर्वापणात्
औदार्यादघशोषणादगणितश्रेयःपदप्रापणात् ।
सेव्यः श्रीपतिरेक एव सततं सन्त्यत्र षट् साक्षिणः
प्रह्लादश्च विभीषणश्च करिराट् पाञ्चाल्यहल्या ध्रुवः ॥ १८ ॥

18. வாத்ஸல்யாத³ப⁴யப்ரதா³னஸமயாதா³ர்(த்)தார்(த்)தி நிர்வாபணாத்
ஔதா³ர்யாத³க⁴ஶோஷணாத³க³ணிதஶ்ரேயঃபத³ப்ராபணாத் |
ஸேவ்யঃ ஸ்ரீபதிரேக ஏவ ஸததம் ஸந்த்யத்ர ஷட் ஸாக்ஷிணঃ
ப்ரஹ்லாத³ஶ்ச விபீ⁴ஷணஶ்ச கரிராட் பாஞ்சால்யஹல்யா
த்⁴ருவঃ ॥

அன்பினாலும், அபயமளிக்கும் கொள்கையினாலும், துன்புறுவோர் துயரத்தை நீக்குவதாலும், தாராளத்தன்மையினாலும், பாபங்களைப் போக்கடிப்பதாலும், எண்ணுவதற்கரிய சுபஸ்தானத்தை அடைவிப்பதாலும், ஸ்ரிய:பதி ஒருவரே எக்காலமும் வழிபடத்தக்கவர். இதற்கு ப்ரஹ்லா

தன், விபீஷணன், கஜேந்திரன், திரௌபதி, அஹல்யா, துருவன் என்கிற அறுவர் ஸாக்ஷிகளாக இருக்கிறார்கள்.

जिह्वे कीर्तय केशवं मुररिपुं चेतो भज श्रीधरं
पाणिद्वन्द्व समर्चयाच्युतकथाःश्रोत्रद्वय त्वं शृणु ।
कृष्णं लोकय लोचनद्वय हरेर्गच्छाङ्घ्रियुग्मालयं
जिघ्र घ्राण मुकुन्दपादतुलसीं मूर्धन् नमाधोक्षजम् ॥ १९ ॥

19. ஜிஹ்வே கீர்(த்)தய கேஶவம் முரரிபும் சேதோ ஹஜ ஸ்ரீதரம்
பாணித்3வந்த்3வ ஸமர்(ச்)சயாச்யுதகதா ஶ்ஶ்ரோத்ரத்3வய த்வம் ஶ்ருணு |
க்ருஷ்ணம் லோகய லோசநத்3வய ஹரேர் கச்சா2ங்க்4ரியுக்மாலயம்
ஜிக்4ர க்4ராணமுகுந்த3பாத3துலஸீம் மூர்த்4ந் நமாதோ4க்ஷஜம் ||

ஏ நாவே, நீ கேசவனைப் பாடுவாயாக; ஏ மனதே, நீ முரசத்ருவை ஸ்மரிப்பாயாக; இணைக் கைகளே. லக்ஷ்மீதரனை நீங்கள் அர்ச்சனை செய்யுங்கள்; இணைக் காதுகளே, அச்சுதனுடைய கதைகளை சிரவணம் செய்யுங்கள்; இரண்டு கண்களே, ஸ்ரீ கிருஷ்ணனைக் காணுங்கள்; இரண்டு கால்களே, நீங்கள் ஹரியின் ஆலயங்களுக்குச் செல்லுங்கள்; ஏ மூக்கே, முகுந்தனுடைய பாதத்தில் அர்ச்சிக்கப்பட்ட துளஸியை நீ முகர்வாய்; தலையே, அதோக்ஷஜனை நமஸ்கரிப்பாய்.

'விசித்ரா தேஹஸம்பத்தி ரீஶ்வராய நிவேதிதும்', அதாவது 'இவ்வளவு விசித்திரமான சரீர ஸம்பத்தைப் பகவான் நமக்கு அருளியிருப்பது அதை அவரிடத்திலேயே பயன்படச் செய்வதற்காக' என்றுள்ள சாஸ்த்ரத்தை அநுஸரித்து இச்சுலோகம் பாடப்பட்டிருக்கிறது. இப்படி ஒருவன் செய்துகொண்டிருந்தால் மற்றக் காரியங்களை அவன் எவ்வாறு நடத்த இயலும்' என்பதை எண்ணி, ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்ரீ பகவத் கீதையில் 'தேஷாம் நித்யாபியுக்தா

நாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம்' என்று 'நானே நேர் நின்று அவனுடைய யோகக்ஷேமத்தை அவனுக்காக நடத்துகிறேன்' என்று வாக்களித்திருக்கிறார்; அம்பரீஷ மஹாராஜன் விஷயத்தில் அதை அநுஷ்டித்தும் காட்டியிருக்கிறார். அம் மஹாராஜன் பகவானிடத்தில் இருந்துவந்த பிரகாரம் ஸ்ரீ பாகவதத்தில் அடியில் கண்டபடி வருணிக்கப்பட்டிருக்கிறது:

ஸ வை மனஃ க்ருஷ்ணபதாரவிந்தயோஃ
வசாம்ஸி வைகுண்ட குணாநுவர்ணநே |
கரௌ ஹரேர் மந்திரமார்ஜநாதிஷு
ச்ருதிம் சகாராச்யுதஸத்கதோதயே ||
முகுந்தலிங்காலயதர்ஶனே த்ருசௌ
தத்ப்ருத்யகாத்ரஸ்பர்ஶேங்கஸங்கமம் |
க்ராணஞ்ச தத்பாதஸரோஜஸௌரபே
ஸ்ரீமத் துளஸ்யா ரஸநாம் ததர்(ப்)பிதே ||
பாதௌ ஹரேஃ க்ஷேத்ரபதாநுஸர்(ப்)பணே
ஶிரோ ஹ்ருஷீகேஶபதாபிவந்தனே |
காமஞ்ச தாஸ்யே ந து காமகாம்யயா
யதோத்தமஶ்லோக ஜநாஶ்ரயா ரதிஃ ||'

இதன் ஸங்க்ரஹமேதான் இங்குள்ள ச்லோகமும்.

हे लोकाश्शृणुत प्रसूतिमरणव्याधेश्चिकित्सामिमां
योगज्ञास्समुदाहरन्ति मुनयो यां याज्ञवल्क्यादयः ।
अन्तर्ज्योतिरमेयमेकममृतं कृष्णाख्यमापीयतां
तत्पीतं परमौषधं वितनुते निर्वाणमात्यन्तिकम् ॥२०॥

20. ஹே லோகாஶ் ச்ருணுத ப்ரஸூதிமரணவ்யாதேஶ் சிகித்ஸாமிமாம்
யோகஜ்ஞாஸ்ஸமுதாஹரந்தி முநயோ யாம் யாஜ்ஞவல்க்யாதயஃ|
அந்தர்ஜ்யோதிரமேயமேகமம்ருதம் க்ருஷ்ணாக்யமாபீயதாம்
தத்பீதம் பரமௌஷதம் விதநுதே நிர்வாணமாத்யந்திகம் ||

ஏ ஜனங்களே! பிறப்பது இறப்பது என்கிற நோய்க்கு வைத்தியம் சொல்லுகிறேன், கேளுங்கள்; இந்த வைத்தி

யத்தை, யோகமுறையை நன்கறிந்த யாக்ஞவல்கியர் முதலாயினோர் எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். உட்சோதியாய் விளங்கும் கிருஷ்ணன் என்ற பெயருள்ள ஆராவமுதமான அபார வீர்யமுள்ள இது ஒன்றையே குடியுங்கள். இச் சிறந்த மருந்து, பானஞ் செய்யப்பட்டவுடனேயே, சாசுவதமான ஆரோக்கியத்தைப் பரவச் செய்கின்றதாகும்.

நிவ்ருத்ததர்ஷை: உபகீயமாநாத்
ஹவௌஷதாத் ஶ்ரோத்ரமநோஹிராமாத் |
க உத்தமஶ்லோககுணாநுவாதாத்
புமான்விரஜ்யேத விநா பஶுக்நாத் ||

ஸ்ரீ பகவந்நாம ஸங்கீர்த்தனத்திற்கு முக்தன், முமுக்ஷு, பத்தன் இம்மூவரும் அதிகாரிகள் என்பதும், அவர்கள் ஒவ்வொருவரும் முறையே வேண்டுவதான ஆநந்தம், ஔஷதப்ராப்தி, இந்திரிய ஸுகம் என்றுள்ள பயன்கள் இங்கே இருக்கின்றனவென்றும் ஸ்ரீ பாகவதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதையெண்ணி, முமுக்ஷு ஜீவர்களைப் பார்த்து, அவர்கள் தீர்க்க ஆசைப்படும் பிறவி நோய்க்கு இங்கே மருந்து சொல்லப்படுகிறது. அம்ருதம் என்கிற பதப்ரயோகத்தால் ஔஷதங்களுக்கு இயல்பு கசப்பாகவிருந்தும், இம்மருந்து அவ்வாறில்லாமல் அமிர்தம் போல் இனித்திருக்கும் என்பர். இதற்கு "அநுபானம் முதலியவை ஒன்றும் கிடையா. பத்தியமும் இல்லை" என்பதை ஏக, பரம, சப்தங்கள் த்வனிப்பிக்கின்றன.

हे मर्त्याः परमं हितं शृणुत वो वक्ष्यामि संक्षेपतः
संसारार्णवमापदूर्मिबहुलं सम्यक्प्रविश्य स्थिताः ।
नानाज्ञानमपास्य चेतसि नमोनारायणायेत्यमुं
मन्त्रं सप्रणवं प्रणामसहितं प्रावर्तयध्वं मुहुः ॥ २१ ॥

21. ஹே மர்த்யா꞉ பரமம் ஹிதம் ஶ்ருணுத வோ வக்ஷ்யாமி ஸம்-
க்ஷேபத꞉
ஸம்ஸாரார்ணவமாபதூர்மிபஹுளம் ஸம்யக்ப்ரவிஶ்யஸ்திதா꞉
நாநாஜ்ஞானமபாஸ்ய சேதஸி நமோ நாராயணாயேத்யமும்
மந்த்ரம் ஸப்ரணவம் ப்ரணாமஸஹிதம் ப்ராவர்(த்)தயத்வம்மு
ஹு꞉ ॥

இறக்கும் இயல்புள்ள மனிதர்களே ! நானாவித அபாய அலைகள் நிரம்பப்பெற்ற ஸம்ஸார ஸாகரத்தில் வெகுதூரம் பிரவேசித்திருக்கும் உங்களுக்கு உத்கிருஷ்டமான மேலும் உபாயம் ஒன்றைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன், கேளுங்கள். உங்கள் மனதில் பலவாறுயுள்ள அறிவுகளையோ, அறியாமைகளையோ ஒதுக்கி, நமோ நாராயணாய என்ற அந்த மந்திரத்தையே ஓம் என்பதுடன் சேர்த்து வணக்கத்துடன் அடிக்கடி ஆவர்த்தனம் செய்யுங்கள்.

மந்த்ர உபதேசத்திற்கு உரிய அதிகாரிகள் முதலிய நியமங்கள் வேண்டப்படுகின்றன. 'அஷ்டாக்ஷர மந்த்ரோபதேசத்திற்கு ஸம்ஸாரத்தில் உழலும் தன்மை ஒருவனுக்கு எவ்வளவுக் கெவ்வளவு இருக்கிறதோ, அவனே உத்தமாதிகாரி', என்று ஸ்ரீ குலசேகரர் எண்ணி, அவ்வித அதிகாரிகளே உலகெங்கும் கணக்கற்றிருப்பதையும் நினைத்து, அவர்களுக்கு அம் மந்த்ரத்தை யாதொரு நியமமும் விதியாமல் உபதேசிக்கிறார். இது இவருடைய ஔதார்யாதிசயத்தையும், மந்த்ரத்தின் பிரபாவாதிசயத்தையும் உணர்த்துவதாகும்.

ப்ரணாமஸஹிதம் என்ற நியமம் ஒன்று மட்டும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. மந்த்ரத்திலும் அதற்குத் தேவதையான ஸ்ரீமந் நாராயணனிடத்திலும், (இக்கவியைப் போல) மந்த்ரத்தை உபதேசிக்கும் ஆசார்யனிடத்திலும் அளவற்ற ப்ரீதி விச்வாஸமே ப்ரணாம சப்தத்தால் அறிவிக்கப்படுவதாகும். இப் ப்ரணாம மில்லாத போது ப்ரணவாக்ஷரம் இல்லாவிட்டால், எப்படி அஷ்டாக்ஷரம் என்ற

பெயரே மந்த்ரத்திற்கு ஸித்தியாதோ, அவ்விதம் மந்திர ஜபத்திற்குரிய பலன் ஒன்றும் கைகூடாது. இதை நினைத்தே ஸப்ரணவம் ப்ரணமஸஹிதம் என்று இங்கே சொல்லியிருப்பது.

पृथ्वी रेणुरणुः पयांसि कणिका फल्गुस्फुलिङ्गो लघुः
तेजो निश्वसनं मरुत्तनुतरं रन्ध्रं सुसूक्ष्मं नभः ।
क्षुद्रा रुद्रपितामहप्रभृतयः कीटास्समस्तास्सुराः
दृष्टे यत्र स तावको विजयते भूमावधूतावधिः ॥ २२ ॥

22. ப்ருத்வீ ரேணுரணு: பயாம்ஸி கணிகா ஃபல்குஸ்புலிங்கோ லகு:
தேஜோ நிஶ்வஸநம் மருத்தநுதரம் ரந்த்ரம் ஸுஸூக்ஷ்மம் நப:॥
க்ஷுத்ரா ருத்ரபிதாமஹப்ரப்ருதய: கீடாஸ்ஸமஸ்தாஸ்ஸுரா:
த்ருஷ்டே யத்ரஸதாவகோவிஜயதே பூமாவதூதாவதி:॥

எதைக் கண்ணுற்ற போது (பஞ்ச மஹா பூதங்களில்) பூமி நுண்ணியதோர் துகள் போலவும், ஜலம் சிறு திவலையே போலவும், நெருப்பு ஓர் பொறி எனவும், வாயு அல்ப மூச்சுக் காற்றுப் போலவும், ஆகாசம் மிகச் சிறிய துவாரம் போலவும், ருத்ரசதுர்முகாதி தேவர்கள் எல்லோரும் சிறிய புழுக்கள் போலவும் தோன்றுவரோ, அந்த எல்லை கடந்து நிற்கும் உம்முடைய மகிமை ஒன்றே சிறந்து விளங்குகின்றது.

க்ஷுத்ரா ருத்ரபிதாமஹப்ரப்ருதய: என்று சொல்லியிருப்பதற்கு, அந்தத் தேவர்கள் தாழ்ந்தவர்கள் என்பதில் சிறிதேனும் தாத்பர்யம் கிடையாது. ஸ்ரீமந் நாராயணனிடத்தில் உள்ள பக்தியின் அளவிடமுடியாத ஆதிக்யமும் அனன்யத்வமுமே இங்கே குறிப்பு.

இதில் அநுஸரிக்கப் பட்டிருக்கும் ப்ரகாரம்,

மம து யஷியம் யாதா லோகே விலோசனசந்த்ரிகா
நயனவிஷயம் ஜன்மன்யேக: ஸ ஏவ மஹோத்ஸவ: ॥

'என் கண்களுக்குச் சந்திரிகை போல் விளங்கும் இவளை நான் ஒருகால் கண்டால் அதுவே எனக்கு ஜன்ம ஸாபல்யம்; மற்றெதையும் மிகத் துச்சமாக நினைக்கிறேன்' என்று ஒரு காமுகன் சொல்லும் முறையைத் தழுவியதாகும்.

बद्धेनाञ्जलिना नतेन शिरसा गात्रैस्सरोमोद्गमैः
कण्ठेन स्वरगद्गदेन नयनेनोद्गीर्णबाष्पाम्बुना ।
नित्यं त्वच्चरणारविन्दयुगलध्यानामृतास्वादिनाम्
अस्माकं सरसीरुहाक्ष सततं संपद्यतां जीवितम् ॥ २३ ॥

23. பத்தேநாஞ்ஜலிநா நதேந ஶிரஸா காத்ரைஸ்ஸரோமோத்கமை:
கண்டேந ஸ்வர கத்கதேந நயனேநோத்கீர்ணபாஷ்பாம்புநா।
நித்யம் த்வச்சரணாரவிந்தயுகள த்யாநாம்ருதாஸ்வாதிநாம்
அஸ்மாகம் ஸரஸீருஹாக்ஷ ஸததம் ஸம்பத்யதாம் ஜீவிதம் ॥

தாமரைக்கண்ணா! கூப்பிய கைகளுடன், வணங்கிய தலையுடன், சிலிர்த்த மயிர்க்கால்களையுடைய தேகத்துடன், தழைதழைத்த குரலுள்ள கண்டத்துடன், கண்ணீர் பெருகுகின்ற கண்களுடன், எந்நாளும் உன்றன் இரண்டு சரண கமலங்களைத் தியானிப்பது என்கிற அமிருதரஸத்தைப் பருகிக் கொண்டிருப்பவர்களாய் நாங்களேயாகி எங்களுடைய வாழ்நாட்கள் கடைத்தேறட்டும்.

அஸ்மாகம் என்று பன்மையாகக் கூறப்பட்டிருப்பது 'ஏக: ஸ்வாது ந புஞ்ஜீத', இனிய பதார்த்தம் எதையும், ஒருவன் தனித்துப் புசிக்கலாகாது என்கிற நியாயத்தை அனுசரிப்பதாகும்.

ஸரஸீருஹாக்ஷ என்பது அப்படி நாங்கள் பெறுமாறு எங்களை நீ குளிரக் கடாக்ஷிக்க வேண்டும் என்னும் பொருளை அடக்கிக்கொண்டிருக்கிறது.

हे गोपालक हे कृपाजलनिधे हे सिन्धुकन्यापते
हे कंसान्तक हे गजेन्द्रकरुणापारीण हे माधव ।
हे रामानुज हे जगत्त्रयगुरो हे पुण्डरीकाक्ष मां
हे गोपीजननाथ पालय परं जानामि न त्वां विना ॥२४॥

24. ஹே கோபாலக ஹே க்ருபாஜலநிதே ஹே ஸிந்துகந்யாபதே
ஹே கம்ஸாந்தக ஹே கஜேந்த்ர கருணாபாரீண ஹே மாதவ ।
ஹே ராமாநுஜ ஹே ஜகத்த்ரய குரோ ஹே புண்டரீகாக்ஷ மாம்
ஹே கோபீஜநநாத பாலய பரம் ஜாநாமி ந த்வாம் விநா ॥

ஏ பசுக்களைக் காப்பவனே! ஏ கருணைக்கடலே! ஏ கடல்மகள் நாயகா! ஏ கம்ஸனைக் கொன்றவனே! ஏ கஜேந்திரனுக்கு அருள் புரிந்தவனே! ஏ மாதவா! ஏ ராமாநுஜா! ஏ மூவுலகும் காக்கும் குருவே! தாமரைக் கண்ணுடையாய்! கோபிகா ஜனங்களுக்கு ஆதரவு அளிப்பவனே! என்னைக் காப்பாற்ற வேண்டும். உன்னை ஒழிய வேறு (சரணம் அளிக்கும்) எவரையும் நான் அறியேன்.

இந்த ச்லோகம் 'கோப்த்ருத்வ வரணம்' என்கிற சரணாகதியின் நான்காவது அங்கத்தை விஷயீகரிப்பதாகும். 'கோப்த்ருத்வ வரணம்' என்றால் ஈச்வரனுடைய ரக்ஷையைப் பிரார்த்திப்பதாகும். 'ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே' என்பது சாஸ்திரம். இதில் உள்ள ஸம்போதனங்கள் பகவானுடைய ரக்ஷண சீலத்தையும், அதற்குரிய சாமார்த்திய விசேஷத்தையும் அறிவிப்பனவாகும்.

भक्तापायभुजङ्गगारुडमणिस्त्रैलोक्यरक्षामणिः
गोपीलोचनचातकाम्बुदमणिस्सौन्दर्यमुद्रामणिः ।
यः कान्तामणिरुक्मिणीघनकुचद्वंद्वैकभूषामणिः
श्रेयो देवशिखामणिर्दिशतु नो गोपालचूडामणिः ॥२५॥

25\. பக்தாபாயபுஜங்ககாருடமணிஸ் த்ரைலோக்யரக்ஷாமணிஃ
கோபீலோசனசாதகாம்புதமணிஸ்ஸௌந்தர்யமுத்ராமணிஃ|
யஃ காந்தாமணிருக்மிணீ கனகுசத்வந்த்வைகபூஷாமணிஃ
ஶ்ரேயோ தேவஶிகாமணிர் திஶது நோ கோபாலசூடா-
மணிஃ||

பக்தர்களின் துர்க்கதியாகிற ஸர்ப்பங்களுக்குக் கருட மணியாய், மூவுலகுக்குமோர் காப்பு மணியாய், கோபிகைகளின் கண்களாகிற சாதகங்களுக்கு மேகமணியாய், அழகு என்பதற்கோர் அடையாள மணியாய், மாதர்மணியாகிய ருக்மிணி தேவியின் பருத்த ஸ்தனங்களுக்கு இன்றியமையாத அலங்கார மணியாய் விளங்கும் இந்த பசுபால சிரோமணியான தேவசிகாமணி நமக்குரிய நற்பயனைத் தந்தருளட்டும்.

இந்த ச்லோகத்தாலும், இதற்குப் பின்னுள்ள இரண்டு ச்லோகங்களாலும், மனிதர்கள் தங்கள் கஷ்டங்களைத் தீர்த்து சுகம் அடையும் பொருட்டு வெகு பிரயாஸைப்பட்டுத் தேடும் மணி, மந்த்ர, ஔஷதம் என்பவை ஸாக்ஷாத் கண்ணனைத் தவிர வேறில்லை என்கிற ஸித்தாந்தம் பிரேரேபிக்கப்படுகிறது.

शत्रुच्छेदैकमन्त्रं सकलमुपनिषद्वाक्यसम्पूज्यमन्त्रं
संसारोत्तारमन्त्रं समुपचिततमस्सङ्घनिर्याणमन्त्रम् ।
सर्वैश्वर्यैकमन्त्रं व्यसनभुजगसंदष्टसन्त्राणमन्त्रम्
जिह्वे श्रीकृष्णमन्त्रं जप जप सततं जन्मसाफल्यमन्त्रम् ॥२६

26\. ஶத்ருச்சேதைக மந்த்ரம் ஸகலமுபநிஷத்வாக்யஸம்பூஜ்ய
மந்த்ரம்
ஸம்ஸாரோத்தாரமந்த்ரம் ஸமுபசிததமஸ்ஸங்கநிர்யாண
மந்த்ரம் |
ஸர்வைஶ்வர்யைகமந்த்ரம் வ்யஸநபுஜகஸந்தஷ்ட
ஸந்த்ராணமந்த்ரம்
ஜிஹ்வே ஶ்ரீக்ருஷ்ணமந்த்ரம் ஜப ஜப ஸததம் ஜந்மஸாபல்ய
மந்த்ரம் ||

ஏ நாவே! ஸ்ரீகிருஷ்ண மந்த்ரத்தையே இடைவிடாது திரும்பத் திரும்ப ஜபம் செய்துகொண்டிரு. சத்துருக்கள் பட்டுப்போவதற்குத் தக்க மந்த்ரம் இது; பரிபூர்ணமானதும் உபநிடதச் சொற்களால் கொண்டாடப்பட்டதுமான மந்த்ரம்; ஸம்ஸாரத்தினின்று கரையேற்றும் மந்த்ரம்; குவிந்து கிடக்கும் அஞ்ஞானமாகிய கன இருளைப் போக்கடிக்கும் மந்த்ரம்; ஸர்வவித ஸம்பத்துக்களுக்கும் மூல மந்த்ரம்; துயர் என்னும் அரவால் தீண்டப்பட்டவர்களின் உயிரைக் காக்கும் மந்த்ரம்; ஜன்மமெடுத்ததற்குப் பயனும் இம் மந்த்ரமே.

**व्यामोहप्रशमौषधं मुनिमनोवृत्तिप्रवृत्त्यौषधं**
**दैत्येन्द्रार्तिकरौषधं त्रिभुवनीसञ्जीवनैकौषधम् ।**
**भक्तात्यन्तहितौषधं भवभयप्रध्वंसनैकौषधं**
**श्रेयःप्राप्तिकरौषधं पिब मनश्श्रीकृष्णदिव्यौषधम् ॥ २७ ॥**

27. வ்யாமோஹப்ரஶமௌஷதம் முனிமனோவ்ருத்திப்ரவ்ருத்யௌஷதம்
ஷதம்
தைத்யேந்த்ரார்(த்)திகரௌஷதம் த்ரிபுவநீஸஞ்ஜீவனைகௌஷதம் ।
பக்தாத்யந்தஹிதௌஷதம்பவபயப்ரத்வம்ஸனைகௌஷதம்
ஶ்ரேயஃப்ராப்திகரௌஷதம் பிப மனஶ் ஸ்ரீக்ருஷ்ணதிவ்யௌஷதம் ॥

வாராய், மனமே! ஸ்ரீ கிருஷ்ணனென்கிற சிறந்த ஔஷதத்தைக் குடி. அது மயக்கங்களைத் தெளிவிக்கும் ஔஷதம்; முனிவர்களுடைய மானஸிக வியாபாரங்களைத் தன்னிடமே செல்லச்செய்யும் ஔஷதம்; அசுரஅரசர்கள் அனைவரையும் நோவுபடச் செய்யும் ஔஷதம்; மூவுலகங்களும் புத்துயிர் பெறுவதற்கேற்றதோர் ஔஷதம்; பக்தர்களுக்கு மிகவும் ஹிதமான ஔஷதம்; பிறவிப் பயத்தை நாசம் செய்வதற்கு இன்றியமையாத ஔஷதம்; ஸர்வவித மங்களங்களையும் அடைவிக்கும் ஔஷதமும் இதுவே.

आम्नायाभ्यसनान्यरण्यरुदितं वेदव्रतान्यन्वहं
मेदश्छेदफलानि पूर्तविधयस्सर्वे हुतं भस्मनि ।
तीर्थानामवगाहनानि च गजस्नानं विना यत्पद-
द्वन्द्वाम्भोरुहसंस्मृतीर्विजयते देवस्स नारायणः ॥ २८ ॥

28. ஆம்நாயாப்யஸநாந்யரண்யருதிதம் வேதவ்ரதாந்யந்வஹம்
மேதஶ்சேதபலானி பூர்(த்)தவிதயஸ் ஸர்வே ஹுதம் பஸ்மநி|
தீர்தாநாமவகாஹநாநி ச கஜஸ்நானம் விநா யத்பத-
த்வந்த்வாம்போருஹஸம்ஸ்ம்ருதீர் விஜயதே தேவஸ்ஸ
நாராயண: ॥

எவருடைய இரண்டு சரணகமலங்களின் நினைவு இல்லாதபோது, வேதங்களை ஓதுவதெல்லாம் காட்டுப் புலம்பலெனப் போய்விடுமோ, அவ்வேதங்களிலே சொல்லிய விரதங்களைத்தான் தவருமல் அனுஷ்டிப்பதும் (சரீரத்தில்) கொழுப்புநீர் குறைவதற்கு மாத்திரமே ஹேதுவாகுமோ, தடாகங்களை அமைப்பது முதலிய நற்செய்கைகளும் சாம்பலில் பண்ணிய ஆகுதியென ஆகிவிடுமோ, புண்ணிய தீர்த்தங்களில் ஆடுவதும் யானைகுளித்ததாக முடியுமோ, அந்த தேவன் ஸாக்ஷாத் நாராயணன் ஒருவனே மேன்மைபெற்று விளங்குகிறுன்.

சதுர்வேத ரதோ விப்ரோ வாஸுதேவம் ந விந்ததி |
வேதபாரபராக்ராந்த: ஸ வை ப்ராம்ஹண கர்தப: ||
ப்ராயஶ்சித்தாநி சீர்ணாநி நாராயணபராங்முகை: |
ந நிஷ்புநந்தி ராஜேந்த்ர ஸுராகும்பமிவாபகா: ||
தர்ம: ஸ்வனுஷ்டித: பும்ஸாம் விஷ்வக்ஸேந கதாஸு ய: |
நோத்பாதயேத்யதி ரதிம் ச்ரம ஏவ ஹி கேவலம் ||

என்றுள்ள ஸ்ம்ருதி வசனங்கள், நாராயணஸ்மிருதி ஒன்றே ஸமஸ்த ஸத்கார்யங்களுக்கும், ப்ராயஶ்சித்தங்களுக்கும், உடல்களுக்கு உயிர்போல் இருப்பதாகையால், அந்த ஸ்ம்ருதி இல்லாதபோது அவை எல்லாம் பயனற்று அத்

யந்தம் ஸத்தையற்றவைகளாய் விடுவன என்பதை நிரூபிக்கின்றன. அவற்றை ஒட்டியே இந்த ச்லோகமும் பாடப்பட்டிருக்கிறது.

**श्रीमन्नाम प्रोच्य नारायणाख्यं के न प्रापुर्वाञ्छितं पापिनोऽपि ।**
**हा नः पूर्वं वाक्प्रवृत्ता न तस्मिन् तेन प्राप्तं गर्भवासादिदुःखम् ॥२९**

29. ஸ்ரீமந் நாம ப்ரோச்ய நாராயணாக்யம்
கே ந ப்ராபுர் வாஞ்சிதம் பாபிநோ'பி |
ஹா நஃ பூர்வம் வாக் ப்ரவ்ருத்தா ந தஸ்மிந்
தேந ப்ராப்தம் கர்பவாஸாதிது:கம் ||

பாபிகளாயிருந்தாலும் நாராயணா என்ற ஸுமங்களமான திருநாமத்தை நன்றாகக் கீர்த்தனம் செய்தவர்கள் எவர்கள் தாம் தங்கள் அபீஷ்டங்களைப் பெறவில்லை? என்ன கஷ்டம்! முன்னமேயே அவனிடத்தில் நம்முடைய வாக்கு செல்லாமற் போயிற்றே! ஆகையால் அல்லவோ தாய் வயிற்றில் வசித்தல் முதலிய துயரங்கள் நம்மால் அடையப்பட்டன.

இந்த ச்லோகம் கார்ப்பண்யம் (தைந்யம்) என்னும் சரணாகதியின் கடைசி அங்கத்தைத் தெரிவிக்கின்றது.

ஸ்ரீமந்நாம என்பதை ஒரு ஸமாஸ பதமாகக் கொண்டு திருமாலின் திருநாமம் என்று பொருள் கூறுவர் ஸ்ரீ. உ. வே. ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி. ஆனால் ஸ்ரீ ராகவானந்த வ்யாக்யானத்தில் 'நாம' என்பதற்கு ஸ்ரீமத் என்பதை விசேஷணமாக வைத்து 'ஸுமங்களம் நாம' என்று அர்த்தம் சொல்லியிருப்பதால், அந்தப்படிக்கே இங்கே அது மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

**मज्जन्मनः फलमिदं मधुकैटभारे मत्प्रार्थनीय मदनुग्रह एष एव ।**
**त्वद्भृत्यभृत्यपरिचारकभृत्यभृत्यभृत्यस्य भृत्य इति मां स्मर लोकनाथ ॥ ३० ॥**

30. மஜ்ஜந்மந: ஃபலமிதம் மது கைடபாரே
மத்ப்ரார்த்தனீய மதநுக்ரஹ ஏஷ ஏவ |
த்வத் ப்ருத்ய ப்ருத்ய பரிசாரக ப்ருத்ய ப்ருத்ய
ப்ருத்யஸ்ய ப்ருத்ய இதி மாம் ஸ்மர லோகநாத ||

மது கைடபர்கள் என்கிற அசுரர்களைக் கொன்றவனே! ஹே ஜகந்நாதா! நான் ஜன்மமெடுத்ததற்கு இதுவே பயன். எனக்கு நீ செய்யவேண்டியதாய் என்னால் வேண்டப்படும் அனுக்கிரஹமும் இதுவே. உம்முடைய அடிமைக்கு அடிமையாய் இருப்பவருடைய பரிசாரகரின் அடிமைக்கு அடிமை எவரோ, அவரடிமையின் அடிமையாக இருப்பவன் என்று நீ என்னைக்கருத்திற்கொள்ளல்வேண்டும்.

இந்தச்லோகத்திற்கு ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசார்ய ஸ்வாமியின் நிர்வாஹம் மிக அழகியதாய் இருப்பதால், அதுவே இங்கெடுத்து எழுதப்படுகிறது:

**யஸ்ஸப்தபர்வவ்யவதாநதுங்காம் ஶேஷத்வ காஷ்டாமபஜந்முராரே:**
என்று பாதுகா ஸஹஸ்ரத்தில் ஸ்ரீ தேசிகன் புகழும்படி 'அடியா ரடியார்தம் அடியா ரடியோங்களே' என்று திருவாய்மொழியில் சரமாவதி தாஸ்யத்தை அருளிச் செய்த நம்மாழ்வாரை அடி யொற்றி இவரும் அப்படிப் பட்ட தாஸ்யத்தை விரும்புகின்றார்.'

எவ்விதச் செல்வத்திற்கும், பரம்பரா ப்ராப்தியை யொட்டி ஒரு கௌரவம் உண்டாவதைப் பார்க்கிறோம். இதற்கு எதிர்த்தட்டாகப் புதுப்பணம் படைத்தவன் என்று குறைத்தும் சொல்லுகிறோம். செல்வத்துக் கெல்லாம் செல்வமான அடிமைச் செல்வத்திற்கும் இதே நியாயந் தான் என்பதை இச் சுலோகம் உதாஹரிக்கின்றது.

नाथे नः पुरुषोत्तमे त्रिजगतामेकाधिपे चेतसा
सेव्ये स्वस्य पदस्य दातरि सुरे नारायणे तिष्ठति ।
यं कञ्चित्पुरुषाधमं कतिपयग्रामेशमल्पार्थदं
सेवायै मृगयामहे नरमहो मूढा वराका वयम् ॥ ३१ ॥

31. நாயே ந: புருஷோத்தமே த்ரிஜகதாமேகாதிபே சேதஸா
ஸேவ்யே ஸ்வஸ்ய பதஸ்ய தாதரி ஸுரே நாராயணே திஷ்டதி |
யம் கஞ்சித் புருஷாதமம் கதிபய க்ராமேசமல்பார்த்தம்
ஸேவாயை ம்ருகயாமஹே நரமஹோ மூடா வராகா வயம் ||

(லோகமும் வேதமும் ஏகோபித்து) புருஷோத்தமன் என்று சொல்லிக் கொண்டாடப் பெற்றவனும், மூவுலகை யும் ஓர் குடைக் கீழ்வைத்து ஆளுபவனும், மனத்தாலேயே வழிபடக் கூடியவனும், (அப்படி வழிபடுவோர்க்கு) தன் ஸ்தானத்தையே தந்தருளுபவனுமான தேவன் ஸ்ரீமந் நாராயணன் நம் ஸ்வாமியாய் விளங்கும்போது, (அவனை அணுகாமல்) ஒரு சில கிராமங்களையுடையவனும், அற்பக் கொடையாளியும், புல்லிய புருஷனுமான ஓர் அநாமதேய னான நரமனிதனை ஆச்ரயிப்பதற்குத் தேடுகின்றோமே, என்ன அறிவிலாப் பிராணிகள் நாம்!

'அந்தவத் து ஃபலம் தேஷாம் தத்பவத்யல்பமேதஸாம்' என்று ஸர்வேச்வரனான தன்னை விட்டு இதர தேவதைகளை ஆச்ரயிப்பவர்களை புத்தி ஹீனர்களென்று கீதையில் ஸ்ரீ கண்ணன் சொல்லி யிருக்கிறார். இது, மூடா: என்கிற பாடந்தான் ஸமீசீனம் என்பதை உணர்த்துவதாகும்.

**मदन परिहर स्थितिं मदीये मनसि मुकुन्दपदारविन्दधाम्नि ।**
**हरनयनकृशानुना कृशोऽसि स्मरसि न चक्रपराक्रमं मुरारेः ॥३२॥**

32. மதநபரிஹரஸ்திதிம்மதீயே மநஸி முகுந்தபதாரவிந்ததாம்நி |
ஹரநயனக்ருசாநுநா க்ருசோ'ஸி ஸ்மரஸி ந சக்ரபராக்ரமம்
[முராரே: ||

கேளாய், காமனே! ஸ்ரீ முகுந்தனுடைய திருவடித் தாமரைகள் தங்குமிடமான என்றன் ஹ்ருதயத்தில் இருப் பதை விட்டு நீ விலகிப் போய்விடு. ருத்ரருடைய கண் நெருப்பால் நீறுபட்ட நீ, முரனைக்கொன்ற இவனுடைய சக்கரத்தின் வல்லமையைக் கருதாதிருப்பாயா என்ன?

'இந்த்ரியார்யபரா யூயம் நாராயணபரா வயம்' என்பது போல ஸ்ரீமந் நாராயணனிடத்தில் பக்தி செய்யும் ருசியறிந்தவர்கள் காமஸுகத்தை மனதாலும் நினைக்கமாட்டார்கள் என்பது இங்கே தாத்பர்யம். பக்தி ஸ்பர்சம் உண்டானபோது, விஷயஸுகம் தானாகவே விலகிவிடும் என்னும் உண்மையும் இங்கே த்வனிதமாகும்.

தவாம்ருதஸ்யந்தினி பாதபங்கஜே
நிவேஶிதாத்மா கதமன்யதிச்சதி |
ஸ்திதே'ரவிந்தே மகரந்தநிர்பரே
மதுவ்ரதோ நேக்ஷுரஸம் ஹி வீக்ஷதே ||

"தேன் பெருகும் பெருமை பெற்ற தாமரைப் பூவைவிட்டு, முள்ளிலவம் பூவை வண்டு ஒருபோதும் இச்சியாதுபோல, அமிர்தப் பெருக்கையுடைய உன் திருவடித்தாமரையில் வைக்கப் பெற்ற மனது வேறொன்றை எவ்வாறு நாடும்" என்றுள்ள ஸ்ரீ யாமுனாசார்யருடைய ஸூக்தி இங்கே நினைக்கத்தக்கது.

**तत्त्वं ब्रुवाणानि परं परस्मात् मधु क्षरन्तीव सतां फलानि ।**
**प्रावर्तय प्राञ्जलिरस्मि जिह्वे नामानि नारायणगोचराणि ॥ ३३ ॥**

33. தத்த்வம் ப்ருவாணானி பரம் பரஸ்மாத்
மது க்ஷரந்தீவ ஸதாம் ஃபலானி |
ப்ராவர்த்தய ப்ராஞ்ஜலிரஸ்மி ஜிஹ்வே
நாமானி நாராயணகோசராணி ||

வாராய் நாக்கே! உன்னைக் கும்பிடுகிறேன். ஸ்ரீமந் நாராயணனை விஷயீகரிக்கும் நாமங்களையே நீ பெருகச்செய். அவை உயர்விற்கும் உயர்வான தத்துவத்தைச் சொல்லுகின்றன. தேன் பெருகப் பெற்றனபோல இருக்கின்றன. ஸாதுக்கள் (விரும்பும்) கனிகள் அவைகளே.

இங்கு ஜிஹ்வே என்று ஸம்போதனம் செய்திருப்பதின் ஸ்வாரஸ்யம், அர்த்தம் அறியாமல் கேவலம் நாவினால் சொன்னாலும் பகவன்நாமங்கள் அளவற்ற நற்பயனைத்

தந்து, கேட்பவர் மனதையும் கவரக்கூடியவை, என்பதைக் காட்டுகிறது.

**इदं शरीरं परिणामपेशलं पतत्यवश्यं श्लथसन्धि जर्जरम् ।**
**किमौषधैः क्लिश्यसि मूढ दुर्मते निरामयं कृष्णरसायनं पिब ॥३४॥**

34. இதம் ஶரீரம் பரிணமபேஶலம்
பதத்யவஶ்யம் ஶ்லதஸந்தி ஜர்ஜரம் |
கிமௌஷதை: க்லிஶ்யஸி மூட துர்மதே
நிராமயம் க்ருஷ்ணரஸாயனம் பிப ||

இச் சரீரம், நாளடைவில் முதிர்ச்சியடைந்து பலமற்ற தாய், கட்டுகள் தளர்ந்து விழப்போவது நிச்சயம். மயக்க முற்று மதிகெட்ட மனிதா! எதற்காக மருந்துகளைத் தேடிக்கொண்டு வீணாகச் சிரமப்படுகிறாய்? தீங்கொன்று மில்லாத ஸ்ரீ கிருஷ்ணன் என்கிற ரஸாயனத்தைப் பானம் பண்ணு, போதும்.

மூட துர்மதே என்பது தேகத்தையே ஆத்மா வென்று ப்ரமிக்கும் மதியீனத்தைக் காட்டுகிறது.

ஆத்மானமேவாத்மதயா விஜானதாம்
தேனைவ ஜாதம் நிகிலம் ப்ரபஞ்சிதம் ||

தேகத்தை ஆத்மாவென்று ப்ரமிக்கின்றவர்களே, இப் ப்ரபஞ்சத்திலுள்ள ஸர்வவித அநர்த்தங்களுக்கும் மூலபூதர்கள் என்பது ஸ்ரீ சுகருடைய ஸித்தாந்தம்.

**दारा वाराकरवरसुता ते तनूजो विरिञ्चिः**
**स्तोता वेदस्तव सुरगणो भृत्यवर्गः प्रसादः ।**
**मुक्तिर्माया जगदविकलं तावकी देवकी ते**
**माता मित्रं बलरिपुसुतस्त्वय्यतोऽन्यन्न जाने ॥ ३५ ॥**

35. தாரா வாராகரவரஸுதா தே தநூஜோ விரிஞ்சி:
ஸ்தோதா வேதஸ்தவ ஸுரகணோ ப்ருத்யவர்க: ப்ரஸாத: |
முக்திர் மாயா ஜகதவிகலம் தாவகீ தேவகீ தே
மாதா மித்ரம் பலரிபுஸுதஸ்த்வய்யதோ'ந்யந் ந ஜானே ||

பாற் கடலின் புதல்வி உன் தேவி. சதுர்முகன் உன் புதல்வன். உன்னைத் துதிப்பது வேதம். தேவர் குழாங்கள் உன்னுடைய வேலைக்காரர்கள். உன்றன் அநுக்ரஹமே மோக்ஷமெனப்படும். உலகெல்லாம் உன்றன் மாயையின் விலாஸம். உன்னுடைய அன்னை தேவகி. மகேந்திரன் புதல்வனான அர்ஜுனன் உனக்குத் தோழன். உன்விஷயத்தில் இவற்றைத் தவிர வேறொன்றையும் அறிந்திலேன் நான்.

பகவத் ஸம்பந்தமாயுள்ள நிர்விசேஷ ஞானத்தைக் காட்டிலும், ஸவிசேஷ ஞானமே உபாதேயம் என்பது இச்சுலோகத்திலுள்ள விஷயம். பரிமித புத்திகளாய் இருக்கும் நமக்கு, ஸவிசேஷ ஞானம் எளிதில் பகவதனுபவத்தைத் தந்து நம்மைக் கடைதேற்றக் கூடுமே தவிர, நிர்விசேஷ ஞானத்தை அடைவதற்குச் செய்யும் பிரயாஸம் ஸபலமாகாது. அதை எண்ணியே ஸ்ரீ சுகரும், 'ஜ்ஞானே ப்ரயாஸம் உதபாஸ்ய' என்று உபதேசிப்பர். "அவ்யக்தா ஹி கதிர் து:க்கம் தேஹவத்பிரவாப்யதே" என்று இந்த நிர்விசேஷ ஞானத்தை அடைவது சரீரம் படைத்தவர்கள் அனைவருக்கும் அரிது என்பதை ஸ்ரீகிருஷ்ணபகவானே சொல்லுகிறார்.

कृष्णो रक्षतु नो जगत्त्रयगुरुः कृष्णं नमस्याम्यहम्
कृष्णेनामरशत्रवो विनिहताः कृष्णाय तस्मै नमः ।
कृष्णादेव समुत्थितं जगदिदं कृष्णस्य दासोऽस्म्यहं
कृष्णे तिष्ठति सर्वमेतदखिलं हे कृष्ण रक्षस्व माम् ॥३६॥

36. க்ருஷ்ணோ ரக்ஷது நோ ஜகத்ரய குருஃக்ருஷ்ணம்நமஸ்யாம்யஹம்
க்ருஷ்ணேநாமரஶத்ரவோ விநிஹதாஃ க்ருஷ்ணாய தஸ்மை நமஃ
க்ருஷ்ணாதேவ ஸமுத்திதம் ஜகதிதம் க்ருஷ்ணஸ்ய தாஸோ'ஸ்ம்யஹம்
க்ருஷ்ணே திஷ்டதி ஸர்வமேததகிலம் ஹே க்ருஷ்ண ரக்ஷஸ்வ மாம் ॥

மூவுலகுக்கும் (அஞ்ஞான இருளைப் போக்கி ஞான ஒளியைத்தரும்) குருவான ஸ்ரீ கிருஷ்ணன், நம்மைக் காப்பாற்றுவானாக. ஸ்ரீ கிருஷ்ணனையே நான் நன்கு நமஸ்கரிக்கின்றேன். ஸ்ரீ கிருஷ்ணனாலல்லவா தேவர்களைப் பகைத்தவர்கள் பட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணனின் பொருட்டு நான் ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணுகின்றேன். இவ்வுலகெல்லாம் ஸ்ரீகிருஷ்ணனிடமிருந்தே உண்டாயிற்று. ஸ்ரீகிருஷ்ணனுடைய தாஸன் நான். இங்கு தென்படுவதெல்லாம் ஸ்ரீ கிருஷ்ணனிடத்திலேயே நிலைபெற்று நிற்கின்றன. ஸ்ரீ கிருஷ்ணா! (மறுமுறையும் சொன்னேன்) அடியேனை நீ நன்கு காப்பாயாக.

இச் சுலோகத்தின் அமைப்பை உற்று நோக்கினோமானால் இக்கவிக்குக் கிருஷ்ணப் பைத்தியம் பிடித்து இவ்வாறு ஸர்வ விபக்திகளிலும் அவரையே வைத்து முன்பின் ஸம்பந்தக் குறைவு, புநருக்தி, முதலியவற்றைக் கவனியாமல் சொல்லுகின்றார் என்பது புலப்படும். பக்தர்கள் விஷயத்தில், இது குணமே தவிர தோஷமாகாது.

तत्त्वं प्रसीद भगवन् कुरु मय्यनाथे
विष्णो कृपां परमकारुणिकः किल त्वम् ।
संसारसागरनिमग्नमनन्त दीन-
मुद्धर्तुमर्हसि हरे पुरुषोत्तमोऽसि ॥ ३७ ॥

37. தத்வம் ப்ரஸீத³ ஹ⁴க³வந் குரு மய்யநாதே²
விஷ்ணோ க்ருபாம் பரமகாருணிகஃ கில த்வம் |
ஸம்ஸார ஸாக³ர நிமக்³ந மநந்த தீ³ந-
முத்³த⁴ர்(த்)துமர்ஹஸி ஹரே புருஷோத்தமோ’ஸி ||

ஷட்குணபரிபூர்ணா! எங்கும் பரந்திருப்பவனே! முடிவில்லாப்பொருளே! மிகுந்த இரக்கமுடையவனல்லவா நீ? அந்த நீ கதியற்றிருக்கும் என்னிடம் மனமுவந்து கருணை புரிவாயாக. பிறவிக் கடலில் மூழ்கியிருக்கும் இவ் வற்பனை

வெளியேற்றக் கடவாய். அடியார் படுந்துயராயினவெல்லாம் அகற்றும் ஹரியல்லவா நீ? புருஷோத்தமன் என்பானும் நீ தானே ஆகின்றாய்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்
அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது

என்றிருக்கும் அபியுக்த சிரோமணிகளின் வசனங்களுக்கிணங்க ஸம்ஸாரத்தைக் கடப்பதற்கு பகவத் கிருபையேயன்றி வேறோர் உபாயம் இல்லை என்றறிந்த இக் குலசேகர கவி, அந்தப் பகவானையே பல நாமங்களைச் சொல்லிக் கூப்பிட்டு, அவருடைய ஆபிமுக்யத்தைப் பெறுவதற்குரிய அத்யவஸாயத்தைக் கைப்பற்றுகிறார் இங்கே.

**नमामि नारायणपादपङ्कजं करोमि नारायणपूजनं सदा ।**
**वदामि नारायणनाम निर्मलं स्मरामि नारायणतत्त्वमव्ययम् ॥३८॥**

38. நமாமி நாராயணபாதபங்கஜம் கரோமி நாராயணபூஜனம் ஸதா |
வதாமி நாராயணநாம நிர்மலம் ஸ்மராமி நாராயணதத்வ
மவ்யயம் ||

நாராயணனின் சரண கமலத்தை நமஸ்கரிக்கின்றேன். நாராயணனின் பூஜைகளை எப்பொழுதும் செய்கின்றேன். 'நாராயணா' என்னும் மாசற்ற நாமத்தைச் சொல்லுகின்றேன். நாராயணனுடைய விகாரமற்றதான யதார்த்த நிலையைக் கருதுகின்றேன்.

கரோமி, வதாமி, ஸ்மராமி என்பதால் காயிக- வாசிக- மானஸிகமாய் உள்ள பூஜனம், கீர்த்தனம், ஸ்மரணம் இவைகள் அனைத்தையும், நாராயண ஸம்பந்தமுள்ளவையாக்கி, நமாமி என்பதால் அவற்றாலுண்டான பலஸமர்ப்பணமும் அவர் திருவடிகளிலேயே என்று சொல்லப்படுகிறது.

श्रीनाथ नारायण वासुदेव श्रीकृष्ण भक्तप्रिय चक्रपाणे ।
श्रीपद्मनाभाच्युत कैटभारे श्रीराम पद्माक्ष हरे मुरारे ॥ ३९ ॥

39. ஸ்ரீநாத2 நாராயண வாஸுதே3வ
ஸ்ரீக்ருஷ்ண ப4க்தப்ரிய சக்ரபாணே |
ஸ்ரீபத்3மநாபா4ச்யுத கைடபா4ரே
ஸ்ரீராம பத்3மாக்ஷ ஹரே முராரே ||

अनन्त वैकुण्ठ मुकुन्द कृष्ण गोविन्द दामोदर माधवेति ।
वक्तुं समर्थोऽपि न वक्ति कश्चित् अहो जनानां व्यसनाभिमुख्यम् ॥

40. அநந்த வைகுண்ட2 முகுந்த3 க்ருஷ்ண
கோ3விந்த3 தா3மோத3ர மாத4வேதி |
வக்தும் ஸமர்த்2யோ'பி ந வக்தி கஶ்சித்
அஹோ ஜநாநாம் வ்யஸநாபி4முக்2யம் ||

என்ன ஆச்சர்யம்! ஜனங்களெல்லாம் இப்படிக்குத் தங்கள் தீமைகளை எதிர்கொண்டு அழைக்கின்றார்களே! ஸ்ரீ நாத2 என்று தொடங்கி, மாத4வ என்று முடிவாயுள்ள மேல் ச்லோகங்களில், உள்ள பகவன்னாமங்களைச் சொல்லும் சக்தியைப் பெற்றிருந்தும், அவற்றை ஒருவருமே சொல்லாது ஒழிகின்றனரே.

நாராயணேதி நாமாஸ்தி வாகஸ்தி வஶவர்(த்)தினீ |
ததா2'பி நரகே கோ4ரே பததீதி தத3த்3பு4தம் ||

"நாராயண என்னும் நாமம் ஸர்வ ஸாதாரணமாயிருக்க, அதைச் சொல்லக்கூடிய வாக்கும் ஸஹஜமாய் அனைவர்க்கும் இருக்க, இவ்வாறு பலரும் நரகம் செல்லும் விந்தைதான் விந்தை" என்றுள்ள வ்யாஸஸூக்தியின் விவரணமாக இந்த ச்லோகமும், இத்துடன் ஏகான்வயமாய் இருக்கும் முன் ச்லோகமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

ध्यायन्ति ये विष्णुमनन्तमव्ययं हृत्पद्ममध्ये सततं व्यवस्थितम् ।
समाहितानां सततामयप्रदं ते यान्ति सिद्धिं परमां च वैष्णवीम् ॥

41. த்யாயந்தி யே விஷ்ணு மநந்தமவ்யயம்
ஹ்ருத்பத்ம மத்யே ஸததம் வ்யவஸ்திதம் |
ஸமாஹிதாநாம் ஸததா பயப்ரதம்
தே யாந்தி ஸித்திம் பரமாஞ்ச வைஷ்ணவீம் ||

ஹ்ருதய புண்டரீகத்தில் எப்போதும் நியதமாய் வஸிப்பவனும், தன்னிடத்தில் மனதைச் செலுத்துகிறவர்களுக்கு அபய ப்ரதானம் செய்பவனும், ஸர்வவ்யாபியும், விகார சூன்யனுமாய் உள்ள அனந்தனை எவர்கள் தியானிக்கின்றனரோ, அவர்கள் ஒப்புயர்வற்ற வைஷ்ணவ ஸித்தியை, அதாவது, மோக்ஷத்தைப் பெறுகிறார்கள்.

அர்ஜுனனைப்போல் தானும் ஒரு சிறந்த பக்தனென்று தன்னை இக் குலசேகரர் மிகப்பெருமையுடன் அபிமானித்துக்கொண்டு, 'கௌந்தேய ப்ரதிஜாநீஹி' என்கிற முறையைத் தழுவி, பகவத்-த்யானம் செய்கிறவர்கள் நிச்சயம் பரமபதம் அடைவார்கள் என்று இக்கவி இங்கே ப்ரதிஜ்ஞை செய்கிறார்.

क्षीरसागरतरङ्गशीकरासारतारकितचारुमूर्तये ।
भोगिभोगशयनीयशायिने माधवाय मधुविद्विषे नमः ॥ ४२ ॥

42. க்ஷீர ஸாகர தரங்க சீகராஸார தாரகித சாரு மூர்(த்)தயே |
போகிபோக சயநீய சாயிநே மாதவாய மதுவித்விஷே நம: ||

பாற்கடலின் அலைத்துளிகளால் நக்ஷத்திரங்களை யுடையதுபோல் அழகிய திருமேனியை உள்ளவனும், பாம்பின் உடலையே படுக்கையாய்க்கொண்டு அதில் நித்திரை செய்பவனும், மதுவென்ற அசுரனைக் கொன்றவனுமான மாதவனின் பொருட்டு நமஸ்காரம்.

இந்த ச்லோகத்தால் 'சாந்தாகாரம் புஜக சயனம்' என்றவாறு சாந்தரஸம் நிரம்பப்பெற்ற பகவத் ஸ்வரூபத்திலே 'நம:' என்று ஆத்ம நிக்ஷேபம் செய்கிறார் இப் பக்த கவி; இந்த 'ஆத்ம நிக்ஷேபம்' என்பது 'நான் எனக்குரிய

னல்லேன், பகவானுக்கே உரியேன்' என்று தன்னைப் பக வானுக்கு அர்ப்பணம் பண்ணும் ப்ரகாரத்தை அறிவிக்கும் சரணுகதியின் அங்கங்களில் முக்கியம் பெற்றது.

**आश्चर्यमेतद्धि मनुष्यलोके सुधां परित्यज्य विषं पिबन्ति ।**
**नामानि नारायणगोचराणि त्यक्त्वाऽन्यवाचः कुहकाः पठन्ति ॥**

43. ஆஶ்சர்யமேதத்தி மனுஷ்ய லோகே
ஸுதாம் பரித்யஜ்ய விஷம் பிபந்தி |
நாமானி நாராயணகோசராணி
த்யக்த்வா'ன்யவாச: குஹகா: படந்தி ||

இம்மானிட உலகத்தில் இது ஓர் புதுமை! (என்ன வென்றால்) கபட ஸ்வபாவமுடையவர்கள் ஸ்ரீமந் நாரா யணனைக் குறிக்கும் நாமங்களை விட்டு மற்றப் பேச்சைப் பேசுகிறார்கள். இது அமிர்தத்தை விட்டொழித்து விஷத் தை அருந்துவது போலிருக்கிறது.

**लाटीनेत्रपुटीपयोधरघटीरेवातटीदुष्कुटी-**
**पाटीरद्रुमवर्णनेन कविभिर्मूढैर्दिनं नीयते ।**
**गोविन्देति जनार्दनेति जगतां नाथेति कृष्णेति च**
**व्याहारैः समयस्तदेकमनसां पुंसामतिक्रामति ॥ ४४ ॥**

44. லாடீநேத்ரபுடீபயோதரகடீரேவாதடீதுஷ்குடீ-
பாடீரத்ரும வர்ணனேன கவிபிர் மூடைர் தினம் நீயதே |
கோவிந்தேதி ஜனார்தனேதி ஜகதாம் நாதேதி க்ருஷ்ணேதி ச
வ்யாஹாரை: ஸமயஸ் ததேகமனஸாம் பும்ஸாமதிக்ராமதி ||

லாடதேசப் பெண்களுடைய கண்கள், ஸ்தனங்கள் இவைகளையும், ரேவை நதிக்கரையிலுள்ள அற்பக்குடிசைகள் சந்தனவிருக்ஷம் முதலிய இவற்றையும் வர்ணித்துக்கொண்டு மூடர்களான கவிகள் நாளைக் கழிக்கிறார்கள். பகவான் ஒருவனிடத்திலேயே மனதை வைத்த மனுஷ்யர்களுக்கோ "கோவிந்தா! ஜநார்த்தனு! ஜகந்நாதா! கிருஷ்ணு!" என் கிற கீர்த்தனங்களால் அந்நாட்கள் செல்லுகின்றன.

अयाच्यमक्रेयमयातयाममपाच्यमक्षय्यमदुर्भरं मे ।
अस्त्येव पाथेयमितः प्रयाणे श्रीकृष्णनामामृतभागधेयम् ॥ ४५ ॥

45. அயாச்யமக்ரேயமயாதயாமம் அபாச்யமக்ஷய்யமதுர்ஹரம்மே
அஸ்த்யேவ பாதேயமித꞉ ப்ரயாணே ஸ்ரீக்ருஷ்ணநாமாம்ருதபா
கதேயம் ॥

யாச்ஞை, க்ரயம் இவற்றுக்கு அவசியமில்லாததாயும், ஸதா ரஸத்துடன் கூடிக் கொண்டிருப்பதாயும், சமைக்கப் படவேண்டிய அவஶ்யமற்றதாயும், குறைவில்லாததாயும், தூக்குவதற்கெளிதாகி லோகயாத்ரைக்கு உற்றதோர் உணவு ஒன்று இருக்கிறது. (அது யாதெனில்) ஸ்ரீ க்ருஷ்ணனுடைய நாமாம்ருதமாகிற செல்வமே தான்.

यस्य प्रियौ श्रुतधरौ कविलोकवीरौ
मित्रे द्विजन्मवरपारशवावभूताम् ।
तेनाम्बुजाक्ष चरणाम्बुजषट्पदेन
राज्ञा कृता कृतिरियं कुलशेखरेण ॥ ४६ ॥

46. யஸ்ய ப்ரியௌ ஶ்ருததரௌ கவிலோகவீரௌ
மித்ரே த்விஜன்மவரபாரஶவாவபூதாம் ।
தேநாம்புஜாக்ஷ சரணாம்புஜ ஷட்பதேந
ராஜ்ஞா க்ருதா க்ருதிரியம் குலஶேகரேண ॥

ஒருவர் ப்ராம்மண ஜாதியிலும், மற்றவர் மிச்ரவர்ணத்திலும் ஜனித்து மிகப் படித்தவர்களும் கவி ஶ்ரேஷ்டர்களுமான இரண்டு அன்பார்ந்த நண்பர்கள் எவருக்கு இருந்தார்களோ, தாமரைக் கண்ணனை ஸ்ரீ முகுந்தனுடைய திருவடித் தாமரைகளை வண்டுகளைப்போல் ஆச்ரயிப்பவரான அந்தக் குலசேகரர் என்ற அரசரால் இந்தப் ப்ரபந்தம் இயற்றப்பெற்றது.

॥ इति श्रीमुकुन्दमालास्तोत्रं सम्पूर्णम् ॥

ஸ்ரீ முகுந்தமாலைத் தோத்திரம் முற்றிற்று

சுபம்

The Liberty Press Madras.

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம:

## ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தில் வெளிவரும் புத்தகங்கள்

ஒவ்வொரு புத்தகத்திலும் பல படங்கள் உள்ளன. ரூ. அ.

*1. ஸ்ரீ மூகபஞ்ச சதீ — ஸ்ரீ மூக கவி அருளிச் செய்தது. 500 ஸ்லோகங்கள் கொண்டது. தேவநாகரி மூலமும் தமிழ் மொழி பெயர்ப்பும். (2-ஆம் பதிப்பு). ... 1—4

2. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் — ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் அருளிய பாஷ்யத்திற்குத் தமிழ் அனுவாதம் ஸ்ரீ வே. நாராயணன் எழுதியது. (2-ஆம் பதிப்பு). ... 1—4

3. ஸ்ரீ பஜகோவிந்தம் -- ஸம்ஸ்க்ருத மூலமும் ஸ்ரீ ஏ. எஸ். நடராஜ ஐயர், பி.ஏ., எம்.எல்., எழுதிய தமிழ் அனுவாதமும். 0—2½

*4. ஸ்ரீ ஶ்யாமளா தண்டகம் — இதை இயற்றியவர் ஸ்ரீ மஹா கவி காளிதாஸன்: ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழ் அனுவாதமும் 0—6

5. ஸ்ரீ முகுந்தமாலா — ஸ்ரீ குலசேகரப் பெருமாள் அருளியது. ஸாஹித்ய வல்லப ஸ்ரீ T. ஸுந்தராசார்ய ஸ்வாமிகள், பி. ஏ., பி. எல்., எழுதிய விரிவுரையுடன் கூடியது. ... 0—5

6. ஸ்ரீ ப்ரச்நோத்தர ரத்ந மாலிகா — ஸ்ரீ சங்கர பகவத்பாதர்கள் இயற்றியதை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் தமிழில் உபதேசித்தது. ... ... ... 0—2½

7. ஸ்ரீ விஷ்ணு பாதாதி கேசாந்த ஸ்தோத்ரம் — ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் இயற்றியது. தமிழ் ஆங்கில அனுவாதங்களுடன் கூடியது. ... ... ... 0—8

*8. ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்த்ரர்கள் அருளிய சிவ மானஸிக பூஜா, கீர்த்தனங்கள், ஆத்ம வித்யா விலாஸ: என்னும் நூல்கள்: ஸ்ரீ வே. நாராயணன், எழுதிய தமிழ் ஆங்கில அனுவாதங்களுடன் கூடியவை. (2-ஆம் பதிப்பு). ... 0—10

9. ஸ்ரீ தீனக்ரந்தனம் என்னும் ஸ்ரீ காசீ விச்வேச்வர ஸ்தோத்ரம் — ஸ்ரீ லோஷ்ட தேவர் ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றிய சுலோகங்களும், ஸ்ரீ. ஏ. எஸ். நடராஜ ஐயர், பி.ஏ., எம்.எல்., எழுதிய தமிழ் அனுவாதமும் கூடியது. ... 0—8

*10. ஸ்ரீ சாந்தி விலாஸம் — ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய ஸம்ஸ்க்ருத ஸ்தோத்ரமும் ஸ்ரீ Y. மகாலிங்க சாஸ்திரியார், எம்.ஏ., பி.எல்., எழுதிய தமிழ் அனுவாதமும் கூடியது ... 0—6

*11. ஸ்ரீ ஆனந்த ஸாகரஸ்தவம்—ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் இயற்றிய ஸம்ஸ்க்ருத ஸ்தோத்திரமும் ஸ்ரீ Y. மகாலிங்க சாஸ்திரியார், M.A., B.L., எழுதிய தமிழ், ஆங்கில அனுவாதங்களுடன் 0—10

**ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம், கும்பகோணம்.**

---

* அச்சில் உள்ளது, சீக்கிரம் வெளிவரும்.

September 1943